தமிழரசு

Tamilarasu

(Monthly)

செப்டம்பர் 2025 (September 2025)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

தமிழ்நாடு அரசு
செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 56
இதழ் (Issue) : 3

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும்

நலம் காக்கும் ஸ்டாலின்

திட்டத்தின் சிறப்பு மருத்துவ முகாம் தொடக்கம்

1256	17	கட்டணமில்லா
உயர்தர மருத்துவ மையங்கள்	சிறப்பு மருத்துவ துறைகள்	மருத்துவ சேவைகள்

சென்னை, தண்டையார்பேட்டை

மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்கள் வழங்கும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
12.08.2025 அன்று சென்னை, தண்டையார்பேட்டை,
கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில்,
மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின்
இல்லங்களுக்கு நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கி,
முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தைத் தொடங்கி வைத்து
அவர்களுடன் உரையாடினார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு வருடம்: ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் 2025
மலர் : 56 விலை ரூ.30 இதழ் : 3

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
மு. சத்தியசீலன்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் /
உதவி இயக்குநர்
எஸ். உதயா கதிரவன்

பொறுப்பாசிரியர்கள் /
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
மு. மணிமேகலை

உதவி ஆசிரியர்
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்
ஜெ. ஜெயசிம்ஹன்

முதுநிலை ஓவியர்
ரா. சாமுண்டிஸ்வரி

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினிவழி வடிவமைப்பாளர்கள்
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

பிழைதிருத்தம் மேற்கொள்பவர்
த. பிரியா

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். (குறள்: 314)

நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ நகர்ப்புறப் பகுதிகளில் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கம்......4

★ நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்......13

★ வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கே சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்"......24

★ முன்னாள் படை வீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டம்......32

★ ஒன்றுபட்ட வலிமையே-நாட்டின் வல்லமை......34

★ "வேர்களைத் தேடி" திட்டத்தின் கீழ் 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான தமிழ் பண்பாட்டுப் பயணம்......43

★ கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.2.83 கோடி செலவில் நினைவு மண்டபம்......45

★ தூத்துக்குடியில் முதலீட்டாளர்கள் மாநாடு ரூ.32,554 கோடி முதலீட்டில் 49,845 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்......55

★ சென்னையில் ரூ.233 கோடி மதிப்பில் 55 புதிய தாழ்தள மின்சார குளிர் சாதனப் பேருந்துகள், 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள்......67

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பயிற்சி வினா-விடைத்தாள்......76

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும்
"நலம் காக்கும் ஸ்டாலின்"
சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று
சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன்
மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கி வைத்தார்.

நகர்புறப் பகுதிகளில் செயல்படும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு பஞ்சாப் முதலமைச்சர் திரு. பகவந்த் மான் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் 26.08.2025 அன்று சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, நகர்புறப் பகுதிகளில் செயல்படும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி, தொடங்கி வைக்கும் விதமாக, மாணவ, மாணவியர்களுக்குக் காலை உணவு வழங்கி, தொடங்கி வைத்தார்.

> **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

"நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. பள்ளிகள் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்பச் சூழலும் இதற்கு காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை அரசு உருவாக்கம் செய்தது. முதற்கட்டமாகச் சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்" என்று ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டித் தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவையில் 07.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110-இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் குறிக்கோள்

மாணவ, மாணவியர் பசியின்றிப் பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், அவர்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடக்கம்

அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவினைப் பரிமாறி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.09.2022 அன்று தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது முதல் தற்போது வரையிலான செயல்பாடுகள்

முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினைச் செயல்படுத்திட 33.56 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,14,095 மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 28.02.2023 முதல் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட செயலியின்படி 1,005 நகர்ப்புற மையங்களில் 1,12,883 குழந்தைகளுக்கும், 963 கிராமப்புற மையங்களில் 41,225 குழந்தைகளுக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 25.08.2023 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை அனைத்து அரசு பள்ளிகளிலும் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில், பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளான 15.07.2024 அன்று நடைபெற்ற விழாவில், ஊரகப் பகுதிகளில் உள்ள 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 2,23,536 மாணவ, மாணவியர்கள் தினசரி பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தில் 34,987 பள்ளிகளில் 17.53 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்த ஆய்வறிக்கையின் வெளிப்பாடு

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, மாநிலத் திட்டக்குழு, மூன்றாம் தரப்பு மதிப்பீடு (Third party evaluation) ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக,, மாணவ, மாணவியரின் வருகை அதிகரித்தல், குழந்தைகளின் கற்றலில் கவனம் மேம்படுதல், 90 சதவிகிதத்திற்கும் அதிகமான குழந்தைகளின் முந்தையப் பாடங்களை நினைவு கூர்வது அதிகரித்தல் ஆகிய முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – மாணவர்கள், பெற்றோர் வரவேற்பு

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளதோடு, சத்தான உணவினை வழங்குவதன் காரணமாகப் பள்ளிகளில் மாணவர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. வேலைக்குச் செல்லும்

தாய்மார்கள், காலை உணவு தயாரிக்கும் நேரம், பொருட்செலவு மீதமாவதோடு மட்டுமல்லாமல், தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம், மகிழ்ச்சி, படிப்புத்திறன் அதிகரித்துள்ளதைக் கண்டு பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்து வருகின்றனர்.

நகர்புறப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கு விரிவுப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

2025-2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் அமைந்துள்ள 2,430 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் இத்திட்டத்தின் கீழ்ப் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்படும் என்றும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியறிவு பெற்றிடவும், தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு, சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், நகர்புறப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 3.06 இலட்சம் மாணவியர்கள் தினசரி பயன்பெறும் வகையில் நகர்புற பகுதிகளுக்கு விரிவுப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

காலையில் இங்கே வந்து குழந்தைகள்கூட உணவு சாப்பிட்டவுடனே, இந்தக் குழந்தைகளைப் போலவே, எனக்கும் எனர்ஜி வந்துவிட்டது! எப்படி இன்றைக்கு முழுவதும் நீங்கள் ஆக்டிவாக இருப்பீர்களோ, அப்படி எனக்கும் இது ஆக்டிவான டே தான்! ஆக்டிவான டே மட்டுமல்ல, மனதுக்கு மிகவும் நிறைவான நாள்!

இந்தத் திட்டத்தால் இருபது இலட்சம் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள் என்றால், இதைவிட மனநிறைவு என்ன இருக்க முடியும்? அடுத்து, இது மகிழ்ச்சிக்குரிய நாளும்கூட! ஏனென்றால், Hon'ble பஞ்சாப் சி.எம் - My younger friend பகவந்த் மான் அவர்கள் இங்கே வந்திருக்கிறார். On behalf of the people of Tamil Nadu, I welcome you!

இதற்கு முன்பு, இப்போது நாடே திரும்பிப் பார்க்கின்ற புதுமைப்பெண் திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்கு, டெல்லியின் முதலமைச்சராக இருந்த திரு. அரவிந்த் கெஜ்ரிவால் வந்தார்.

இப்போது இந்தத் திட்டத்திற்கு திரு.பகவந்த் மான் வந்திருக்கிறார்.

தன்னுடைய பல்வேறு பணிகளுக்கிடையே நேரம் ஒதுக்கி வருகை தந்திருக்கக்கூடிய மாண்புமிகு பஞ்சாப் முதலமைச்சருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி!

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் - சேராது இயல்வது நாடு" என்று சொன்னார் வான்புகழ் வள்ளுவர். அதாவது, பசியும், பிணியும், பகையும் இல்லாத நாடுதான் சிறந்த நாடாகப் பாராட்டப்படும்! என்று சொல்லியிருக்கிறார். வள்ளுவர் வாக்குக்கு இலக்கணமாக இன்றைய நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. கல்வி அறிவை வழங்குவதாக மட்டும் பள்ளிகள் இருக்கக் கூடாது, வயிற்றுப் பசியையும் போக்கவேண்டும் என்று நீதிக்கட்சி ஆட்சி நடைபெற்றபோது, சென்னை மாநகராட்சியில் படிக்கக்கூடிய, பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, பெருந்தலைவர் காமராசர் ஆட்சியில் மதிய உணவுத் திட்டம் செயல்பாட்டிற்கு வந்தது. இதன் தொடர்ச்சியாகக் காலை உணவுத் திட்டம் நம்முடைய திராவிட மாடல் அரசால் தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைத் துவங்குவதற்குக் காரணம் என்னவென்றால், ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாட்களில், சென்னை, அசோக் நகர் மகளிர் பள்ளிக்குச் சென்றபோது, அங்கிருந்த மாணவிகளிடம், "காலையில் என்ன சாப்பிட்டீர்கள்?" என்று சாதாரணமாகக் கேட்டேன். ஆனால், நிறைய குழந்தைகள் சாப்பிடவில்லை என்று சொன்னார்கள்.

சில மாணவிகள், "டீ மட்டும் குடித்துவிட்டு வந்துவிட்டேன்" - "பன் சாப்பிட்டேன்" – இது போல சொன்னார்கள். இதை மனதில் வைத்துத்தான் காலை உணவுத் திட்டம் தேவை என்பதை அரசின் கொள்கையாகவே அறிவித்தேன்.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள், பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில், மதுரை மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.

முதற்கட்டமாக, ஆயிரத்து 545 பள்ளிகளில், ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவர்கள் இந்தத் திட்டத்தால் பயனடைந்தார்கள்.

பிறகு, 25.08.2023 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளையில், அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் இதை விரிவாக்கம் செய்தோம்.

2024-ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளில், ஊரகப் பகுதிகளில் இருக்கக்கூடிய அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதுவரை, 17 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெற்று வந்தார்கள். இந்தத் திட்டத்தின் அட்டகாசமான சக்சஸ், இது கொடுக்கக்கூடிய அபாரமான ரிசல்ட்டைப் பார்த்து, இனி, நகர்ப்புறப் பகுதிகளில் செயல்படுகின்ற 2 ஆயிரத்து 429 அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்கிறோம். இதனால், கூடுதலாக 3 இலட்சத்து 6 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற இருக்கிறார்கள். கிராண்ட் டோட்டலாக சொல்லவேண்டும் என்றால், இனி தமிழ்நாட்டில் செயல்படுகின்ற 37 ஆயிரத்து 416 அரசு, அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் படிக்கின்ற 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் தினந்தோறும் காலையில் சூடாக, சுவையாக, சத்தான உணவு சாப்பிட்டு, கிளாஸ் ரூமுக்குள்ளே தெம்பாக நுழைய இருக்கிறார்கள்.

ஆண்டொன்றுக்கு 600 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், இதைச் செலவு என்று நான் சொல்ல மாட்டேன். இது ஒரு சூப்பரான சோஷியல் இன்வெஸ்ட்மென்ட். எதிர்காலத்தில், நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு, பல மடங்கு இலாபத்தைத் தமிழ்ச் சமூகத்துக்கு தரப் போகின்ற முதலீடு இது! என்னரும் தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களை நம்பி, அவர்களின் திறமை மேல், அறிவு மேல், ஆற்றல் மேல் நம்பிக்கை வைத்து, இந்த முதலீட்டைச் செய்கிறோம். நீங்கள் எல்லோரும் நன்றாகப் படித்து, முன்னேறி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் பணியாற்றினால், அதுதான் இந்தத் திட்டத்தின் உண்மையான வெற்றி!

இன்னும் கொஞ்சம் இறுமாப்போடு சொல்ல வேண்டும் என்றால், இனிமேல், பள்ளிக்கு வருகின்ற குழந்தைகள், பசி காரணமாக வாடிய முகத்துடனும், சோர்வுடனும் இருக்க மாட்டார்கள். புன்னகையும், நம்பிக்கையும், ஆர்வமும், சுறுசுறுப்பும் நிரம்பிய முகங்களைத்தான் இனி பார்க்கப் போகிறோம்.

காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து, நான் இதை க்ளோசா...மானிட்டர் செய்து கொண்டு வருகிறேன். மாநிலத் திட்டக்குழு மூலம்

ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. பசி இல்லாத நிலை, பிள்ளைகள் வயிறு நிறைகிறது என்று மட்டும் இந்தத் திட்டத்தை சிம்ப்பிளாகப் பார்க்க முடியாது. இதனால்,

- உணவுண்ணும் பழக்க வழக்கங்களில் இம்ப்ரூவ்மெண்ட் வந்திருக்கிறது.
- பாசிட்டிவான பழக்க வழக்கங்களை வளர்ப்பதில் பிள்ளைகள் ஆர்வம் காட்டுகிறார்கள்.
- மற்ற குழந்தைகளுடன் ஈசியா, ஜாலியா பழகுகிறார்கள்.
- குழந்தைகளின் ஹெல்த் டெவலப் ஆகியிருக்கிறது.
- ஸ்கூலுக்கு ஆர்வத்துடன் வருகிறார்கள்.
- க்ளாஸ் ரூமில் கவனம் மற்றும் ஈடுபாடு அதிகமாகி இருக்கிறது.
- வகுப்பில் தோழமை உணர்வு மேம்பட்டிருக்கிறது என்று ஆய்வு முடிவுகளில் தெரிய வந்திருக்கிறது.

எதிர்பாராத பல நன்மைகளையும் இந்தத் திட்டம் ஏற்படுத்தி இருக்கிறது. காலை உணவைப் பள்ளிகளே வழங்குவதால், ஒரு குடும்பத்தில் அம்மா – அப்பா இரண்டு பேருமே வேலைக்குச் செல்கிறார்கள் என்றால், அவர்களுடைய பணிச்சுமை குறைந்திருப்பதுடன், குழந்தைகள் ஸ்கூலில் வயிறாரச் சாப்பிட்டிருப்பார்கள் என்ற நம்பிக்கையையும், நிம்மதியையும் தருகிறது!

அவ்வளவு ஏன்... டிசம்பர் 2023 முதல் டிசம்பர் 2024 வரை, அரசுப் பள்ளிகளில், குழந்தைகளிடையே ஆரோக்கியம் அதிகரித்திருக்கிறது. ஹாஸ்பிடலுக்கு செல்வதும் குறைந்திருக்கிறது. இன்னும் சொல்கிறேன். காலை உணவுத் திட்டத்தால், அட்டெண்டன்ஸ் கூடியிருக்கிறது. கற்றல் திறனில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஊட்டச்சத்துக் குறைபாடு குறைந்திருக்கிறது. நோய்த்தொற்று வாய்ப்புகள் அதுவும் குறைந்திருக்கிறது. இப்படி, நிறைய பாசிட்டிவாக இருப்பது ஆய்வு மூலமாக நமக்கு தெரிய வந்திருக்கிறது.

ஒரு திட்டம் மிக மிகச் சிறப்பானது என்றால், மற்ற மாநிலங்களும் அதைப் பின்பற்றுவார்கள். அப்படித்தான், காலை உணவுத் திட்டத்தைப் பிற மாநிலங்களும், பிற நாடுகளுமே கூட தொடங்கவும், செயல்படுத்தவும் ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

கனடா போன்ற வளர்ந்த மேலை நாடுகளிலும், காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம்

முன்னோடியாக நாம் இதைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம் என்பது நமக்கெல்லாம் இருக்கின்ற பெருமை! இந்த நேரத்தில் நம்முடைய அரசு செய்து கொண்டிருக்கின்ற மற்றொரு முக்கியமான திட்டத்தையும்
சொல்ல விரும்புகிறேன்...

அது, "ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்! இந்தத் திட்டத்தால் என்ன பயன் என்றால், இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தின் முதல் பகுதியில், ஆறு மாதம் வரையிலான 14 ஆயிரத்து 901 குழந்தைகளில், 13 ஆயிரத்து 262 குழந்தைகளையும், இரண்டாம் பகுதியில், ஆறு மாதத்தில் இருந்து ஆறு வயது வரையிலான 92 ஆயிரத்து 15 குழந்தைகளில், 61 ஆயிரத்து 651 குழந்தைகளையும் ஊட்டச்சத்துக் குறைபாட்டில் இருந்து மீட்டெடுத்திருக்கிறோம்.

அதேபோல, இரண்டாம் கட்டத்தில், ஆறு மாதம் வரையிலான 76 ஆயிரத்து 705 குழந்தைகளில், 67 ஆயிரத்து 913 குழந்தைகளை சத்துள்ள குழந்தைகளாக வளர்த்தெடுத்திருக்கிறோம்.

இந்தத் திட்டங்கள் மட்டும் கிடையாது, நம்முடைய அரசின் முத்திரைத் திட்டங்களில் முக்கியமான சிலவற்றைச் சொல்லவேண்டும் என்றால்,

குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெறுகின்றவர்களின் எண்ணிக்கை 1 கோடியே 14 இலட்சம் பேர்!

பேருந்துகளில் மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம்!

அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேருகின்ற மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற, புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன்!

வேலைக்குச் செல்கின்ற மகளிருக்குத் தோழி விடுதிகள்!

மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வீட்டுக்கே சென்று, நேரில் ரேஷன் தருகின்ற தாயுமானவர் திட்டம்!

ஏழை, எளிய நடுத்தர மக்கள் இருக்கின்ற இடத்திற்கே சென்று பயனளிக்கின்ற உங்களுடன் ஸ்டாலின்! நலம் காக்கும் ஸ்டாலின்!

இது எல்லாவற்றுக்கும் ஹைலைட்டாக, நாட்டிலேயே Economy-இல் டபுள் டிஜிட் வளர்ச்சி அடைந்திருக்கின்ற மாநிலம் என்றால், அது நம்முடைய தமிழ்நாடுதான்!

நான் C.M. ஆன நாளில் இருந்து எனக்கு இருந்த, இருக்கின்ற ஒரே குறிக்கோள், "தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் நம்பர் ஒன் மாநிலமாக வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் எல்லா வகையிலும் முன்னேறவேண்டும்!" இந்த நேரத்தில் நான் பெரிதாக நன்றி சொல்லிக் கொள்ள விரும்புவது... இந்தக் குழந்தைகளுக்கு சமைக்கின்ற தாய்மார்களுக்குதான்! உங்கள் வீட்டில், உங்கள் குழந்தைகளுக்குச் சமைக்கின்றது போல, நன்றாக சமைக்கிறீர்கள்! மகளிர் சுயஉதவிக் குழு சகோதரிகளுக்கு நான் மனமார்ந்த நன்றியைச் சொல்கிறேன். உங்கள் பணியும் சிறப்பாகத் தொடரவேண்டும்!

மாணவர்களுக்கு நான் சொல்வது ஒன்றுதான்... நன்றாகச் சாப்பிடுங்கள்... நன்றாகப் படியுங்கள்... நன்றாக விளையாடுங்கள்... உங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும்!

முதலமைச்சரான உங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும், நம்முடைய திராவிட மாடல் அரசும், எங்களால் முடிந்த எல்லாவற்றையும் உங்களுக்காகச் செய்து தருவோம்! எங்களுக்கு நீங்கள்தான் எல்லாமே! எப்போதும் உங்களுக்காகத்தான் நாங்கள் இருக்கிறோம்! இருப்போம்! இருப்போம்! குழந்தைகளுக்கு ஆல் த பெஸ்ட்!

நன்றி! வணக்கம்!

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

முதலமைச்சருடைய காலை உணவுத்திட்டத்தை நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்கின்ற, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ள நம்முடைய திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பஞ்சாப் முதலமைச்சர்
திரு. பகவந்த் மான் உட்பட அனைவருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

The bond between Tamil Nadu and Punjab has endured for a long time and continues to grow very strong. When Dr. Kalaignar assumed office for the first time as the Chief Minister of Tamil Nadu in 1969, he visited Ludhiana in Punjab. He observed the functioning of the Punjab Agricultural University there. Inspired by its model, he went on to establish the Agricultural University in Coimbatore in 1971.

Today, Honourable Chief Minister of Punjab, Thiru Bhagwant Mann is gracing this event with his presence. Thank you again sir.

கல்வி மட்டுமில்ல, கல்வியுடன் காலை உணவு, கல்விக்கு உதவித்தொகை என்று நம்முடைய திராவிட மாடல் அரசு கல்விக்காகச் செயல்படுத்தி வருகின்ற சாதனைத் திட்டங்களைப் இன்றைக்கு ஒட்டுமொத்த நாடும் பாராட்டிக் கொண்டிருக்கிறது. நம்முடைய திட்டங்களைப் பிற மாநிலங்கள் பாராட்டுவது மட்டுமல்ல, அதை ஃபாலோவும் செய்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இந்தக் காலை உணவுத்திட்டத்தை, இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகள் சிலவற்றிலும் இன்றைக்குப் பின்பற்ற ஆரம்பித்திருக்கின்றார்கள்.

- தமிழ்நாட்டைப் பின்பற்றி பஞ்சாப் மாநில அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்...
- தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பார்க்கும் போதுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓர் உண்மையான மக்கள் தலைவர் என்பதை உணர முடிகிறது...

மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. பகவந்த் மான் அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்புக்கு மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் முதலில் நன்றி தெரிவித்தார், அத்துடன், கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு ஆகிய துறைகளில் தமிழ்நாடு அரசின் சிறந்த பணிகளைப் பாராட்டினார். பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுக்கும் இடையிலான வலுவான உறவைச் சுட்டிக்காட்டிய பஞ்சாப் முதல்வர் அவர்கள், காலை உணவுத் திட்டம் போன்ற நலத்திட்டங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

“எங்கள் மாநிலத்திலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நாங்கள் பரிசீலனை செய்து வருகிறோம்,” என்று மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு.பகவந்த் மான் அவர்கள் கூறினார். இத்திட்டத்தால் தமிழ்நாட்டில் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் பயனடைகிறார்கள் என்பதை அறிந்து பெருமைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அனைத்து அரசு, அரசு உதவி பெறும் நகர்ப்புறப் பள்ளிகளையும் உள்ளடக்கி இந்தத் திட்டம் இன்று விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்குச் சத்தான உணவை வழங்குதல், வருகையை அதிகரித்தல், கற்றல் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. முக்கிய சமூகப் பிரச்சினைகளைக் கையாள்வதிலும், பொது நலனுக்காக வெற்றிகரமான திட்டங்களை ஏற்றுக்கொள்வதிலும் மாநிலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. பகவந்த் மான் அவர்களின் தமிழ்நாட்டு வருகை வெளிப்படுத்துகிறது.

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குச் சத்தான காலை உணவை வழங்குவதற்காகத் தமிழ்நாடு அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் ஆரோக்கியமான உணவை நாள்தோறும் உண்டு கல்விப் பணிகளை தொடங்குகிறார்கள். இது குழந்தைகளின் ஆரோக்கியம், பள்ளி வருகை மற்றும் கல்வித் திறனை மேம்படுத்த உதவுகிறது என்று மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் கூறினார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பார்க்கும் போதுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓர் உண்மையான மக்கள் தலைவர் என்பதை உணர முடிகிறது.

இங்கே அமர்ந்திருக்கும் மாணவ, மாணவியரே, இது உங்களுக்கான திட்டம்தான் இந்தத் திராவிட மாடல் அரசு உங்களுக்காகத்தான் இதைச் செய்திருக்கிறது. உங்களுக்காக உழைக்கும் சிறந்த முதலமைச்சர் இவர்தான் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சுட்டிக் காட்டி குறிப்பிட்டார். தொடர்ந்து, "நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்ட போது மாணவர்களிடம் இருந்து பலத்த ஆரவாரத்துடன் "ஆம்" என்று மகிழ்ச்சியான முழக்கம் பதிலாகக் கிடைத்தது.

தொடர்ந்து மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் பேசும் போது,

"தமிழ்நாட்டின் காலை உணவுத் திட்டம் ஒரு மிகவும் புதுமையான திட்டம். இது ஒன்றிய அரசுக்கும், பிற மாநிலங்களுக்கும் ஒரு முன்மாதிரித் திட்டமாக விளங்குகிறது. இந்தச் சிறப்பான காலை உணவுத் திட்டத்தை எங்கள் அமைச்சரவையில் விவாதித்து பஞ்சாப் மாநிலத்திலும் கொண்டுவர உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று குறிப்பிட்டார்.

What we began in 2022 as a pilot project in about 1,500 schools has now been expanded to 37,416 government and government-aided schools across Tamil Nadu, benefiting around 21 lakh students. 21 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ்ப் பயனடைந்து வருகின்றார்கள்.

இங்கே மாணவர்கள் மட்டுமல்ல, பெற்றோர்களும், ஆசிரியர்களும் அதிக அளவில் வந்து இருக்கின்றீர்கள். முன்பெல்லாம், பெற்றோர்கள், குறிப்பாகத் தாய்மார்களுக்கு, காலையில எழுந்து, டிபன் செய்து, மாணவர்களைச் சரியான நேரத்திற்குப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று, ஒரே பரபரப்பாகவும், பதட்டமாகவும் இருக்கும். ஆனால், இன்றைக்கு அந்த நிலைமையைத் தலைகீழாக மாற்றியிருக்கின்றார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். உங்கப் பிள்ளைகள் இனி பள்ளியிலேயே ரிலாக்ஸா காலை உணவு சாப்பிட்டு விட்டு, பாடத்தைக் கவனிக்க வைத்திருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இது வெறும் வயிற்றுப்பசியைப் போக்குவதற்கான திட்டம் மட்டுமில்ல, இது மாணவர்களுடைய அறிவுப்பசியைப் போக்குவதற்கான ஒரு மகத்தானத் திட்டம்.

Our Honourable Chief Minister often says that providing health and education to society empowers people to help themselves and emerge as successful citizens and leaders. Therefore, I am confident that this breakfast scheme will further strengthen our students' ability to emerge as successful individuals in each life.

இங்கே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு மட்டும் ஒரு கோரிக்கை. மாணவர்களைப் படிக்க மட்டுமே சொல்லாமல், விளையாட்டு நேரத்தில் விளையாடவும் நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால், மாணவர்களுடைய, உடல் நலம் நன்றாக இருந்தால் தான், அவர்களுடைய மனநலமும் நன்றாக இருக்கும். இந்த காலை உணவுத் திட்டத்தை மாணவர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அதே மாதிரி இங்கே அதிக அளவில் வந்திருக்கக்கூடிய நம்முடைய மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகள் அவர்களுடைய உழைப்பு இந்தத் திட்டத்தின் வெற்றியில் மிக, மிக முக்கியமானதாகும். இந்தக் காலை உணவுத் திட்டத்தைத் தாய்மை உணர்வோடு சமைத்துத் தருகின்ற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த என் அருமைச் சகோதரிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலமைச்சருடைய காலை உணவுத்திட்டம் புது வரலாறு படைக்கட்டும் – நம்முடைய மாணவர்களுடைய கல்வி செழிக்கட்டும்!

நன்றி வணக்கம்!

தமிழ்நாட்டின்
அனைத்து மாவட்டங்களிலும்
"நலம் காக்கும் ஸ்டாலின்"
சிறப்பு மருத்துவ முகாமினை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.08.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்தார்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடக்க விழா

2025-2026ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், உயர் மருத்துவச் சேவைகள் வழங்க ரூ.12.78 கோடி செலவில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த உயர் மருத்துவ சேவை சிறப்பு முகாமிற்கு ரூ.1,08,173 வீதம் மாநிலம் முழுவதும் மொத்தம் 1,256 முகாம்களுக்கு ரூ.13.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம், 388 வட்டாரங்களில் 1,164 முகாம்களும், ஒரு மண்டலத்திற்கு ஒரு முகாம் வீதம், பெருநகரச் சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 4 முகாம்கள் வீதம் 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 3 முகாம்கள் வீதம் மக்கள் தொகை 10 இலட்சத்திற்குக் குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும் என மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

இம்முகாம்கள், சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட உள்ளன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு, உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநலப் பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், சமூகப்-பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்பட உள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிக்கல்வித் துறை, உயர் கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

இம்முகாம்களில் இரத்த அழுத்தப் பரிசோதனை மற்றும் அனைத்துப் பயனாளிகளுக்கும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு முழுமையான இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை அளவு, சிறுநீரகச் செயல்பாட்டுச் சோதனைகள் செய்யப்பட உள்ளன. மேலும், பொது மருத்துவ நிபுணரின் அறிவுறுத்தலின்படி E.C.G, எக்கோ, X-Ray, ஸ்கேன், காசநோய், தொழுநோய் பரிசோதனைகள், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய், மார்பகப் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்படவுள்ளன.

இம்முகாமில் பங்குகொள்ளும் பயனாளர்களுக்குப் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல்

மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மன நல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம் ஆகிய மருத்துவச் சேவைகள், இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பரிசோதனைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்படும். இம்முகாம்களின் விரிவான தரவுத் தொகுப்பு, தொடர் கண்காணிப்பு, பின்தொடர் சிகிச்சை நடவடிக்கைகள் நவீன சுகாதார மேலாண்மைத் தகவல் முறைமை (HMIS 3.0) வாயிலாகக் கண்காணிக்கப்படும்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, முகாமில் பயனாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளைப் பார்வையிட்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார். மேலும், "நலம் காக்கும் ஸ்டாலின்" முகாமில் அமைக்கப்பட்டுள்ள பொது மருத்துவம், இருதய மருத்துவம், இந்திய மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பிரிவுகளைப் பார்வையிட்டார். பின்னர், முகாமில் கலந்துகொண்ட பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகள், மாற்றுத்திறனாளிகளுக்குக் காதொலிக் கருவிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, காணொலி வாயிலாக மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்தச் சிறப்பு மருத்துவ முகாம்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நான் துவக்கத்தில் கூறியதுபோல, மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய பிறகு, நேற்று முன்தினம் தலைமைச் செயலக அலுவலகத்திற்குச் சென்று என்னுடைய வழக்கமான பணிகளைத் தொடங்கினேன். அப்போது என்னுடைய செயலாளர்கள் கூட சொன்னார்கள், "வெளி நிகழ்ச்சிகளை ஒரு வாரத்திற்குத் தள்ளி வைக்கலாமா?" என்று கேட்டார்கள். "இல்லை, அதையெல்லாம் தள்ளி வைக்க வேண்டாம், மக்களைச் சந்தித்தால்தான் எனக்கு உற்சாகம் வரும் – என்னுடைய உடலில் ஏதாவது நோய் இருந்தால் அது சரியாகிவிடும். எனவே, மக்கள் பணியைச் செய்தால், அதுவே எனக்கு உடல் நலத்தைக் கொடுத்துவிடும்"

என்று சொல்லிவிட்டுத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

மருத்துவமனையிலிருந்து வந்த பிறகு, கோட்டைக்கு வெளியே நான் கலந்து கொண்டு பேசுகின்ற முதல் நிகழ்ச்சி இது! நாட்டு மக்களுடைய நலன் காக்கும் நிகழ்ச்சி! நாட்டு மக்களுடைய நலன்தான், என்னுடைய நலன்!

நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, என்ன நிலைமை இருந்தது என்று யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். கொரோனா இரண்டாவது அலை! ஆம்புலன்ஸ் தட்டுப்பாடு - ஆக்சிஜன் சிலிண்டர் தட்டுப்பாடு என்று தமிழ்நாடே நெருக்கடியில் இருந்து தவித்துக் கொண்டிருந்தது. நான் உட்பட, அனைத்து அமைச்சர்களும், அப்போது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்களாக மாறிவிட்டோம். தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, எல்லோரும் தடுப்பூசி போடுவதை உறுதி செய்தோம்!

அதேபோல, இன்றைக்குக் கூட, இந்த "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் மூலமாக, அனைத்து அமைச்சர்களும் மீண்டும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்களாக மாறி அவர்களுடைய மாவட்டத்தில் முகாம்கள் தொடங்கியிருக்கிறார்கள்!

கொரோனா காலத்தில், லாக்டவுனில் பொருளாதார ரீதியாக மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்று ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு தவணையாக நான்காயிரம் ரூபாய் வழங்கினோம். கொரோனாவை சிறப்பாகக் கட்டுப்படுத்தி, இதுதான் மக்களைக் காக்கும் உண்மையான அரசு என்று நிரூபித்தோம்!

அதுமட்டுமல்ல, கல்வியும் – மருத்துவமும் இந்த ஆட்சியின் இரண்டு கண்கள் என்று சொல்லி, கல்விக்காகவும், அதே அளவுக்கு மருத்துவத்திற்காகவும் ஏராளமான திட்டங்களைச் செய்யத் தொடங்கினோம்!

அதில் எல்லாவற்றையும் சொல்ல முடியாது – நேரமில்லை. சிலவற்றை மட்டும் சொல்ல வேண்டும் என்றால், மக்களைத் தேடி மருத்துவம் - இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48 - பாதம் பாதுகாப்போம்-இதயம் காப்போம் - சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம் - மக்களைத் தேடி ஆய்வகச் சேவைகள் - நடப்போம்-நலம் பெறுவோம் திட்டம், வணிகர்களைத் தேடி மருத்துவத் திட்டம் - தொழிலாளர்களைத் தேடி மருத்துவம் - முதல்வர் மருந்தகம் என்று இன்னும் நிறைய திட்டங்கள் இருக்கிறது! நேரத்தின் அருமை கருதி, நான் சில திட்டங்களை மட்டும் இங்கே சொன்னேன்!

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், இந்தத் துறையை மிகச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டு வருகிறார். அதனால்தான், ஐ.நா. சபையே விருது கொடுத்து, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறது! என்னைப் பொறுத்தவரைக்கும், ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்றால், அது ஒவ்வொரு தனிமனிதரையும் சென்றடைய வேண்டும்! ஒரே ஒருவர் கூட விடுபட்டுவிடக் கூடாது! அதில் நான் மிகவும் கவனமாக இருக்கிறேன். அதனால்தான் உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற திட்டங்கள் மூலமாக, ஒவ்வொருவரின் தேவையையும் புரிந்துகொண்டு அவர்களுடைய எதிர்ப்பார்ப்பைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம்!

இன்றைக்குத் தொடங்கியிருக்கின்ற இந்தத் திட்டத்தில், தொடர்ந்து 1,256 முகாம்கள் நடைபெறப் போகிறது! சிறப்பு மருத்துவ வசதிகள் குறைவாக இருக்கின்ற ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கின்ற பகுதிகளில் அவர்களுக்கெல்லாம் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த முகாம்கள் நடத்தப்பட இருக்கின்றன.

ஒவ்வொரு முகாம்களிலும், மருத்துவர்கள் உள்பட 200 மருத்துவப் பணியாளர்கள் இருப்பார்கள். 17 தனித்துவமான மருத்துவச் சேவைகள் இந்த முகாம்களில் இருக்கும். சர்க்கரை, உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்பு உடையவர்கள், இதய நோயாளிகள், கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய சிறப்புக் குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக - பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இந்த முகாம்களில் முன்னுரிமை வழங்கப்படும்.

முகாம்களில், அனைத்துப் பயனாளிகளுக்கும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, முழுமையான இரத்த அணுக்கள் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை அளவு, சிறுநீரக செயல்பாட்டுச் சோதனைகள் செய்யப்பட இருக்கிறது.

பொது மருத்துவ நிபுணர் அறிவுறுத்தலின்படி, E.C.G, எக்கோ, X-Ray, ஸ்கேன், காசநோய், தொழுநோய் பரிசோதனைகள், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய்க் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்பட இருக்கிறது.

இந்த முகாமின் சிறப்பம்சம் என்று நான் சொல்வது, உங்கள் டெஸ்ட் ரிப்போர்ட் அனைத்தும் மொத்தமாக ஃபைல் செய்து உங்களிடம் வழங்கிவிடுவோம். இந்த ரிப்போர்ட், உங்களுடைய 'மெடிக்கல் ஹிஸ்டரி' போன்றது! எதிர்காலத்தில், நீங்கள் எந்த ட்ரீட்மெண்ட்டிற்கு சென்றாலும், எந்த ஹாஸ்பிட்டலுக்கு சென்றாலும், இந்த ரிப்போர்ட் உங்களுக்குப் பயன்படும்!

இந்த முகாம்கள் மூலமாக, இதில் பயனடைகின்ற எல்லோருடைய நலனும் பாதுகாக்கப்படும் என்ற உறுதியை நான் அளிக்கின்றேன்.

நம்முடைய அரசின் குறிக்கோள், நகர்ப்புறத்தில், நன்றாகப் படித்து, வசதியானவர்களுக்குக் கிடைக்கின்ற மருத்துவ சேவை - கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏழை, எளிய, பாமர மக்களுக்கும் கிடைக்கவேண்டும். அதை உறுதி செய்வோம்!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், மருத்துவ உள்கட்டமைப்பு வசதி கிராமப்புறங்கள் வரை பரவலாகிவிட்டது. மருத்துவமனைகளை நோக்கி வர முடியாதவர்களுக்கும் மருத்துவச் சேவைகளை கொண்டுபோக வேண்டும் என்றுதான் இதுபோன்ற முகாம்களை நாம் நடத்துகின்றோம். இதை மக்கள் எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். அப்படி நம்முடைய உடல்நலம் நன்றாக இருந்தால்தான் நம்மால் மகிழ்ச்சியாக வாழமுடியும் – உழைக்க முடியும் – சாதிக்க முடியும்.

மருத்துவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால், சில நாட்களுக்கு முன்னால், நம்முடைய மானமிகு திராவிட இயக்கத்தின் ஆசிரியர் அய்யா அவர்கள், எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதில், மருத்துவமனைக்கு வருகின்றவர்களை நோயாளிகள் என்று அழைக்கக் கூடாது என்று குறிப்பிட்டிருந்தார். அதுவும் சரிதான்! ஏனென்றால், எல்லோருக்கும் உடலில் ஏதாவது ஒரு சிறிய பிரச்சினை இருக்கும்; அதற்காக அவர்களை நோயாளி என்று சொல்லக்கூடாது!

மருத்துவர்களையும் - மருத்துவமனைகளையும் நாடி வருகின்றவர்கள் "மருத்துவப் பயனாளிகளாக" நாம் பார்க்க வேண்டும்! இந்த முகாம்களுக்கு வருகின்ற மக்களையும், மருத்துவப் பயனாளிகளாகத்தான் நீங்கள் பார்க்க வேண்டும்!

அடுத்து, மருத்துவப் பணியாளர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, உங்கள் குடும்பங்களில் ஒருவர் வந்தால் எப்படிக் கவனித்துக் கொள்வீர்களோ, அதேபோல, இந்த முகாம்களுக்கு வருகின்றவர்களையும் அக்கறையுடன் பரிவுடன் நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்!

அதேபோல, மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நான் சொல்லிக் கொள்வது, இந்த முகாம்கள் உங்கள் பகுதிகளில் என்றைக்கு நடைபெறுகிறது? என்னென்ன சேவைகள் வழங்கப்படுகிறது என்று நீங்கள்தான் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும்! அவர்கள் பயன்பெற அத்தனை உதவிகளையும் நீங்கள் செய்யவேண்டும்!

நீங்கள் ஏற்படுத்துகின்ற விழிப்புணர்வால், ஒருவருடைய உயிர் காப்பாற்றப்படலாம். ஒரு குடும்பத்தின் எதிர்காலம் பாதுகாக்கப்படலாம். எனவே, இதில் உங்களுடைய பங்களிப்பும் மிகவும் அவசியம்! எதிலும், எப்போதும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன்னாக இருக்கவேண்டும்! இதுதான் என்னுடைய விருப்பம்! அப்படி, மருத்துவச் சேவைகள் வழங்குவதிலும், மக்களுடைய உடல்நலனைப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன்னாக இருக்கவேண்டும்! இதுபோன்ற திட்டங்களால் அது நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் நலமான உங்களுடைய வாழ்வுக்கு வாழ்த்துகளைச் சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!



எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு வரப்பிரசாதமாக வந்த திட்டம்...

தஞ்சாவூர் மாவட்டம்

இத்திட்டத்தின் கீழ்ப் பயன்பெற்ற பயனாளி தஞ்சாவூர் மாவட்டம் கீழவாசல் பகுதியைச் சேர்ந்த திரு. மோகன் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது.

என்னுடைய உடல்நல பிரச்சினைகளால் அவதியுற்று வருகிறேன். இந்நிலையில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடத்தப்படுவதாக அறிந்து, மருத்துவப் பரிசோதனை செய்தேன். இம்முகாமில் இ.சி.ஜி. எகோ, இரத்த பரிசோதனை, போன்ற பல்வேறு பரிசோதனைகள் முற்றிலும் மருத்துவர்கள் பரிந்துரையின்பேரில் ஒவ்வொன்றாகச் செய்தனர். நாங்கள் இதற்கு முன்பு தனியார் மருத்துவமனைக்கு சென்று இருக்கின்றோம். ஆனால் அதனைக் காட்டிலும், இம்முகாமில் கலந்துகொண்டு எந்தவொரு அலைக்கழிப்பின்றிப் பரிசோதனைகள் செய்தது எங்களுக்கு மனம் நிறைவாக உள்ளது. இத்திட்டம் எங்களைப் போன்ற ஏழை எளிய மக்களுக்கு வரப்பிரசாதம். ஆகவே, இத்திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மோகன்

கருவில் இருக்கும் எனது குழந்தையின் வளர்ச்சி, ஆரோக்கியம், இதயத்துடிப்புக் குறித்துப் பரிசோதனை மேற்கொண்டு உடனடி மருத்துவ அறிக்கைகள்...

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின்கீழ் உயர் மருத்துவச் சேவை முகாமில் சிகிச்சை பெற்றுப் பயனடைந்த ஈரோடு மாவட்டம், சென்னிமலையைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார் திருமதி கலைச்செல்வி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

என் பெயர் கலைச்செல்வி. நான் சென்னிமலையில் வசித்து வருகிறேன். நான் சென்னிலை அரசு மருத்துவமனையில் கர்ப்ப கால மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு வருகிறேன். எனக்கு மருத்துவப் பணியாளர்கள் வெள்ளோடு அரசு மேல்நிலைப்பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் உயர் மருத்துவச் சேவை முகாம்கள் நடைபெறுவதாகத் தெரிவித்தார்கள். அதன்படி மருத்துவ முகாமில் எனக்கு இரத்த மாதிரிப் பரிசோதனைகள், இரத்த சிவப்பணுக்கள் எண்ணிக்கை, இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அளவு உள்ளிட்டவை குறித்த பரிசோதனைகள் மேற்கொண்டார்கள். மேலும், கருவில் உள்ள எனது குழந்தையின் வளர்ச்சி, ஆரோக்கியம், இதயத் துடிப்பு குறித்துப் பரிசோதனை மேற்கொண்டு அன்றைய தினமே மருத்துவ அறிக்கை வழங்கினார்கள். மேலும், மருத்துவர்கள் அறிக்கையின் அடிப்படையில் எனக்கு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் உட்கொள்ள வேண்டிய உணவு வகைகள் குறித்து எடுத்துரைத்தார்கள்.

திருமதி கலைச்செல்வி

இதற்கு முன்பெல்லாம் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ள தனியார் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலையில் எனக்குப் பணம், போக்குவரத்து, நேர விரையம் ஏற்படும். இப்போது நாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளதால் எனக்கும் என்னைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு எங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இத்தகைய மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் உயர் மருத்துவச் சேவை முகாமில் சிகிச்சை பெற்றுப் பயனடைந்த ஈரோடு மாவட்டம், வெள்ளோடு, கொளிச்சிபாளையத்தைச் சேர்ந்த திருமதி ஆர்யா அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

என் பெயர் ஆர்யா. நான் வெள்ளோடு கொளிச்சிபாளையத்தில் வசித்து வருகிறேன். இன்றைய தினம் எங்கள் பகுதிக்கு அருகில் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் உயர் மருத்துவச் சேவை முகாம்கள் ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றார்கள். இம்முகாமில் எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்கள் முழுமையான உடல் ஆரோக்கிய பரிசோதனைகள், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இரத்தத்தில் உள்ள அணுக்களின் எண்ணிக்கை, உப்பு சர்க்கரை கொழுப்பு அமிலங்கள் குறித்த பரிசோதனைகள், X-ray, உடல் பருமன், மனநலம், இரத்த சோகை, கண் பரிசோதனை, காது, மூக்கு, தொண்டை பரிசோதனைகள், கர்ப்பகால பரிசோதனைகள், நீரிழிவு நோயாளிகளுக்கான பாத பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொண்டோம். எங்களுக்கு அப்போதே மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள் வழங்கினார்கள். மருத்துவர்கள் மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் எங்களுக்கு மருந்து, மாத்திரைகள் வழங்கினார்கள்.

திருமதி ஆர்யா

இதற்கு முன்பெல்லாம் நாங்கள் ஏதேனும் உடல்நிலை குறைபாடு ஏற்பட்டால் மட்டும் தான் விடுப்பு எடுத்து மருத்துவமனைக்குச் சென்று மருத்துவர் கூறும் பரிசோதனைகள் செய்வோம். ஆனால் இன்றைய தினம் சனிக்கிழமை முகாம் நடைபெறுவதால் விடுமுறை நாள் என்பதால் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் எங்கள் உடல்நிலை குறித்து மருத்துவப் பரிசோதனைகள் செய்து நாங்கள் அறிந்து கொண்டோம். இது எங்களுக்கு உடல் ஆரோக்கியத்தைக் காத்திட நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. இத்தகைய சிறப்பான மருத்துவ முகாம்களை நடத்திப் பொதுமக்களின் உடல்நலன் காத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர் மாவட்டம்

எவ்விதக் கட்டணமுமின்றி வழங்கப்பட்ட மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம்...

இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த கரூர் மாவட்டம், வேலூர் பகுதியைச் சேர்ந்த பயனாளி திருமதி ஹஜீன் சர்மிளா அவர்கள் நம்மிடம் கூறியபோது,

என் பெயர் ஹஜீன் சர்மிளா. நான் வேலூர் பகுதியில் குடும்பத்தினருடன் வசித்து வருகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்ட முகாமில் பொதுமக்களுக்கு 17 வகையான மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இதில் குறிப்பாகப் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக பெண்களுக்கு மகப்பேறியல், மகளிர் மருத்துவம் வழங்கப்படுவதால் மருத்துவமனைகளுக்குச் சென்று மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனைகளை நாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே எவ்வித கட்டணமும் இன்றி வழங்கப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஹஜீன் சர்மிளா

இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்த கரூர் மாவட்டம், தாந்தோணிமலை பகுதியைச் சேர்ந்த பயனாளி திரு. வேலு அவர்கள் நம்மிடம் கூறும்போது,

என் பெயர் வேலு. நான் தாந்தோணிமலை பகுதியில் வசித்து வருகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்கள். இம்முகாமானது நான் வசிக்கும் பகுதியிலேயே நடைபெறுவதனால் நெடுந்தூரம் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைப்பெற வேண்டிய நிலை மாறி எனது வீட்டிற்கருகிலேயே நடைபெறுகிறது. இம்முகாமில் பல்துறை சிறப்பு மருத்துவர்கள் தரமான மருத்துவ சிகிச்சைகளை வழங்குகிறார்கள். ஏழை, எளிய மக்களுக்கும், கிராமப்புறப் பெண்களுக்கும், தொழிலாளர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இம்முகாமில் 17 வகையான மருத்துவ சிகிச்சையளிக்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வேலு

கரூர் மாவட்டம்

இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்த கரூர் மாவட்டம், வெங்கமேடு பகுதியைச் சேர்ந்த பயனாளி திருமதி ராதிகா அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

என் பெயர் ராதிகா. நான் வெங்கமேடு பகுதியில் வசித்து வருகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நலம் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்கள். பொதுமக்களின் உடல் நலனில் அக்கறைகாட்டும் விதமாக நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம் செயல்படுகிறது. எங்களுடைய தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் உடல்நிலையைப் பரிசோதனை செய்வதற்காக இம்முகாமிற்கு அழைத்து வந்துள்ளோம். அதிக செலவு செய்து சிகிச்சை பெற இயலாத வறுமை நிலையிலுள்ள மக்களுக்கு உயர்தர சிகிச்சையை வழங்கி உதவிடும் திட்டமாக உள்ளது. இதில் இரத்தப் பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி ராதிகா

இராணிப்பேட்டை மாவட்டம்

“நலம் காக்கும் ஸ்டாலின்” உயர் சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தின்கீழ் எங்களது உடல் ஆரோக்கியத்தைக் காத்திட நல்வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்...

இத்திட்டத்தின்மூலம் பயனடைந்த இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாவைச் சார்ந்த மாற்றுத்திறனாளி திரு. வாசுதேவன் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் என்னுடைய மாற்றுத்திறனாளிகளுக்கான பழைய அட்டையினை 1 மணி நேரத்திற்குள்ளாகவே மாற்றி புதிய அட்டையினை வழங்கியுள்ளார்கள். என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகள் வெளியில் சென்றுவர வேண்டுமென்றால் ஒருவருடைய தயவின்றிச் சென்று வருவது மிகவும் கடினமான ஒன்றாகும். இந்நிலையில் இம்முகாம் எங்கள் பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளதால் என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. மேலும், இம்முகாமில் மருத்துவப் பரிசோதனைகளையும் செய்து கொண்டேன். மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் என்னிடம் மிகவும் கனிவுடன் நடந்து கொண்டார்கள். ஆகவே, இத்திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வாசுதேவன்

இத்திட்டத்தின்மூலம் பயனடைந்த இராணிப்பேட்டை மாவட்டம், தென்கடப்பந்தாங்கல் ஊராட்சி, அமரன் நகர் கிராமத்தைச் சார்ந்த பயனாளி திரு. முருகன் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

நான் கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக சர்க்கரை நோயால் அவதிப்பட்டுப் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் காலில் காயம் ஏற்பட்டு கஷ்டப்பட்டு வருகின்றேன். தற்பொழுது நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் என்னை அறுவை சிகிச்சை மருத்துவர் பரிசோதித்துக் காயம் சரியாவதற்கான மருந்தினைக் கொடுத்துள்ளார். இம்முகாமில் உள்ள மருத்துவர்கள் எங்களைப் போன்ற நோயாளிகளை நன்றாகக் கவனிக்கின்றார்கள். எனக்குத் தற்பொழுது மனம் நிறைவாக உள்ளது. மேலும், அடுத்தவாரம் பரிசோதனை மேற்கொள்ள ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு வரச்சொல்லி இருக்கின்றார்கள். ஆகவே, இத்திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ■

திரு. முருகன்

செப்டம்பர் 16: திரு. எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சியார் அவர்கள் பிறந்த நாள்

நன்றி... காணிக்கை...

எத்தனையோ சிலைகளை அண்மைக் காலத்திலே திறந்திருக்கிறோம். ஆனால் இந்தச் சிலைக்கு தத்ரூபமாக அமைந்த முகத்தைப் போல அந்தச் சிலைகளுக்கெல்லாம் அமையவில்லை. அவ்வளவு அற்புதமாக இந்தச் சிலை அமைந்திருக்கிறது.

மறைந்தும் மறையாமலும் நம்முடைய நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்திருக்கும் இராமசாமி படையாச்சியார் அவர்களுடைய திருவுருவத்தை இங்கே சிலையாக நிறுவி அந்த வைபவத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக இந்தச் சமுதாயத்தை மாற்றிட வேண்டும் என்று தமிழகத்திலே முதல் குரல் கொடுத்தவர் நமது இராமசாமி படையாச்சியார் அவர்கள்தான்.

1989ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப்பொறுப்புக்கு வந்த பிறகு, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த போதுதான் அந்தக் கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்பட்டது. இந்தச் சிலையை இங்கே நான் திறந்து வைத்திருக்கிற இந்தச் சூழ்நிலையில் எல்லா சமுதாயத்தினரோடும் ஒன்றுபட்டு ஒத்துழைத்துப் பேதங்களை மறந்து அனைவரும் பாடுபடுவோம் என்ற உறுதியை எடுத்துக் கொள்வதுதான் இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற நன்றிக் காணிக்கையாக இருக்க முடியும்.

*- முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்*
*21.02.2001 அன்று சென்னையில் **இராமசாமி படையாச்சியார்** அவர்களின் சிலையினைத் திறந்துவைத்து ஆற்றிய உரையிலிருந்து...*

வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லங்களுக்கே சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்யும்

“முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.08.2025 அன்று தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தைச் சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர், அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கித் தொடங்கி வைத்து, முதலமைச்சரின் தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையையும் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடுதேடிச் சென்றடையச் செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய நோக்கின்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்.

அடுத்தக் கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” செயல்படுத்தப்படுகிறது.

மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட

15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்தினாளிகளும் என மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களுக்கே சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டு, கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், மின்னணு எடைத்தராசு, e-PoS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர்.

70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள், மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்கும் இத்திட்டத்திற்கு அரசுக்கு 35.92 கோடி ரூபாய் செலவாகும். மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம், நலிவுற்றப் பிரிவினரின் வாழ்வாதாரத்தைச் சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர், அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தைத் தொடங்கி வைத்து, பயனாளிகளிடம் உரையாடினார். அப்போது முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், தங்களுக்கு வீடு தேடி வந்து ரேசன் பொருட்களை வழங்குவதால், மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது என்றும், குடும்பத்தில் ஒருவராகத் தங்களது சிரமங்களை அறிந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" சென்னையில் தொடங்கி வைத்த நிகழ்ச்சியில், மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில்
“முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயப்பேட்டை, பாலாஜி நகர் பகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ், குடிமைப் பொருட்களை வழங்கும் வாகனங்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்து, வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார்.

சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும், இத்திட்டத்தின் கீழ் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் செயல்பட்டு வரும் 36 நியாய விலைக் கடைகளுக்குட்பட்ட 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட 2,467 குடும்ப அட்டை வைத்திருக்கும் குடும்பங்களில் உள்ள 3,548 குடும்ப உறுப்பினர்களின் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மூடிய வாகனங்களில் மின்னணு எடைத்தராசு, e POS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளிகளின் இல்லத்திற்கே சென்று நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் விநியோகம் செய்ய உள்ளனர்.

எங்களுக்கான ரேஷன் பொருட்களை எங்கள் வீட்டிற்கே வந்து வழங்கும் திட்டம்

திரு. பாண்டியன்

மதுரை மாவட்டம் ஆலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த பயனாளி திரு. பாண்டியன் அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்:

எனது பெயர் பாண்டியன், நான் ஆலத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மாதந்தோறும் மாற்றுத்திறனாளிக்கான உதவித் தொகை பெற்று வருகிறேன். மாதந்தோறும் ரேசன் கடைக்குச் சென்று அரிசி, பருப்பு உள்ளிட்ட ரேசன் பொருட்களை வாங்க நானோ அல்லது என் மனைவியோ செல்வோம் கைரேகை உள்ளிட்ட விதிமுறைகள் உள்ளதால் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே ரேசன் கடைக்குச் சென்று பொருட்களைப் பெற்றுவர முடியும். வயதான காலத்தில் எனது மனைவியும் நேரடியாகச் சென்று ரேசன் பொருட்களை வாங்குவதற்கு மிகவும் சிரமப்பட்ட நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த தாயுமானவர் திட்டத்தின் மூலம் இந்த மாதத்திற்கான அரிசி, பருப்பு உள்ளிட்ட பொருட்களை எங்கள் வீட்டிற்கே வந்து வழங்கினார்கள். இத்திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.

திரு. லெட்சுமணன்

மதுரை மாவட்டம், ஆலத்தூர் கிரமத்தைச் சேர்ந்த பயனாளி திரு. லெட்சுமணன் அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்:

நான் ஆலத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். மாதம்தோறும் ரேஷன் கடைக்குச் செல்வதற்கு எங்கள் அருகில் உள்ள சொந்தக்காரர்களை எனது மனைவி அழைத்துச் சென்று வாங்கிக்கொண்டு வருவார்கள். ரேஷன் கடை எங்கள் வீட்டிற்கு அருகில்தான் உள்ளது இருந்தாலும் வயது மூப்புக் காரணமாக அதை சுமந்து வருவதற்குச் சிரமமாக இருந்தது. ரேசன் கடையில் பொருட்கள் மிகவும் தரமாகவும் குறிப்பிட்ட நேரத்தில் வழங்குவார்கள். இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து ரேஷன் பொருட்களை எங்களுக்கு நேரடியாக வந்து தந்தார்கள். இனிமேல் மாதந்தோறும் இரண்டாவது சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் ரேசன் பொருட்கள் நியாய விலைக் கடை ஊழியர்கள் நேரடியாக வந்து வழங்குவார்கள் என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் எங்களிடம் சொன்னார். முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் எங்களுக்கான ரேஷன் பொருட்களை எங்கள் வீட்டிற்கே வந்து வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும் எனது குடும்பத்தின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம்

வயதானவர்களின் நலனுக்காகச் செயல்படுத்திவரும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்...

காஞ்சிபுரம் மாவட்டம், தாமல் ஊராட்சியைச் சேர்ந்த பயனாளி திரு. தருமன் அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்:

திரு. தருமன்

என் பெயர் தருமன். காஞ்சிபுரம் தாமல் ஊராட்சியில் வசித்து வருகிறேன். எனக்கு வயதாகி விட்டதால் என்னால் நடக்க முடியாமல், அதிக பளுவினைத் தூக்கி செல்லவும் முடியாது. இதனால் தனியாக ரேஷன் கடைக்குச் சென்று பொருட்களை வாங்க முடியாமல், மற்றவர்கள் செல்லும்போது அவர்களுடன் சேர்ந்து செல்வேன். அதுமட்டுமில்லாமல் வாங்கிய பொருட்களை வீட்டிற்குக் கொண்டுவர முடியாமல் அவ்வழியாகச் செல்பவரிடம் உதவி கேட்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தேன். இப்படி ஒவ்வொரு மாதமும் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டிருந்தேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வயதான எங்களைப் போன்றோரின் வீட்டிற்கே ரேஷன் பொருட்களைக் கொண்டு சேர்க்கும் திட்டத்தினை ஏற்படுத்தி அதனைச் செயல்படுத்தவும் செய்துள்ளார். இது போன்ற பல திட்டங்களை மக்களின் நலனுக்காகக் கொண்டுவந்து, செயல்படுத்தியும் வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், தாமல் ஊராட்சியைச் சேர்ந்த பயனாளி திரு. ஆறுமுகம் அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்:

திரு. ஆறுமுகம்

என் பெயர் ஆறுமுகம், எனக்கு 70 வயது ஆகிறது. காஞ்சிபுரம் தாமல் பகுதியில் வசித்து வருகிறேன். எங்கள் வீட்டில் உள்ளவர்கள் வேலைக்குச் சென்றுவிடுவதால், வீட்டிற்குத் தேவையான ரேஷன் பொருட்கள் மற்றும் அனைத்துவித அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கும் வெளியில் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கும். வயது முதிர்வின் காரணமாக என்னால் நடக்க முடியாமல் மெதுவாகச் சென்றுதான் ஒவ்வொரு தேவைகளும் நிறைவேற்றிக் கொண்டிருப்பேன். அதுபோல்தான் ரேஷன் கடையில் வரிசையில் நின்று, ரேஷன் பொருட்கள் வாங்கி அதனை வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் வீட்டிற்கே வந்து ரேஷன் பொருட்கள் அனைத்தும் வழங்கியது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. என் போன்ற வயதானவர்கள் ரேஷன் பொருட்கள் வாங்க ரேஷன் கடைக்குச் சென்று வரிசையில் நின்று வாங்கும் பொருட்களை வீட்டிற்கு எடுத்து வருவதற்கு மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் எங்கள் இல்லத்திற்கே பொருட்களைக் கொண்டு வந்து தருவதற்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களைப்போன்ற வயதானவர்களுக்குத் தாயுமானவராகத் திகழ்கிறார்...

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்ற நாமக்கல் மாவட்டம், மாரப்பநாயக்கன்பட்டி,செங்கோடம்பாளையத்தைச் சேர்ந்த பயனாளி திருமதி காளியம்மாள் அவர்கள் நம்மிடம் கூறும்போது,

திருமதி காளியம்மாள்

என் பெயர் காளியம்மாள் (வயது 79), நாமக்கல் மாநகராட்சி, மாரப்பநாயக்கன்பட்டி செங்கோடம்பாளையம் பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கும், என் கணவருக்கும் வயதாகி விட்டதால் நீண்ட தூரம் நடந்து சென்று, ரேசன் பொருட்களை வாங்கி வருவது சிரமமாக இருந்தது. மேலும் அதிக பளுவினைத் தூக்கிச் செல்லவும் முடியாது. இதனால் தனியாக ரேஷன் கடைக்குச் சென்று பொருட்களை வாங்க முடியாமல், மற்றவர்கள் செல்லும்போது அவர்களுடன் சேர்ந்து செல்வேன். அதுமட்டுமில்லாமல் வாங்கிய பொருட்களை வீட்டிற்குக் கொண்டு வர முடியாமல் அவ்வழியாகச் செல்பவரிடம் உதவி கேட்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தது. மாதந்தோறும் ரேசன் பொருட்கள் வாங்குவது என்பது மிகவும் கஷ்டமான சூழ்நிலையாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வயதான எங்களைப் போன்றோரின் வீட்டிற்கே ரேஷன் பொருட்களைக் கொண்டுசேர்க்கும் தாயுமானவர் திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டம் தொடங்கி வைத்த அன்றே எங்களது வீட்டிற்கே நேரடியாக வந்து அரிசி, பருப்பு, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை வழங்கினார்கள். "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தினை" வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களைப் போன்ற முதியவர்களுக்குத் தாயுமானவராகத் திகழ்கிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற நாமக்கல் மாவட்டம், மாரப்பநாயக்கன்பட்டி,செங்கோடம்பாளையத்தைச் சேர்ந்த பயனாளி திருமதி செல்லம்மாள் அவர்கள் நம்மிடம் கூறும்போது,

திருமதி செல்லம்மாள்

என் பெயர் செல்லம்மாள் கந்தசாமி. எனக்கு 82 வயது ஆகிறது. நாமக்கல் மாநகராட்சி மாரப்பநாயக்கன்பட்டி பகுதியில் வசித்து வருகிறேன். எங்கள் வீட்டில் உள்ளவர்கள் வேலைக்குச் சென்று விடுவதால், வீட்டிற்குத் தேவையான ரேஷன் பொருட்கள், அனைத்துவித அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கும் வெளியில் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கும். வயது முதிர்வின் காரணமாக என்னால் நடக்க முடியாமல் மெதுவாகச் சென்றுதான் ஒவ்வொரு வேலைகளையும் செய்வேன். மேலும், ரேஷன் கடையில் வரிசையில் நின்று, ரேஷன் பொருட்கள் வாங்கி அதனை வீட்டிற்கு எடுத்து செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். எங்கள் வீட்டிற்கே வந்து ரேஷன் பொருட்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். இந்த மாதத்திற்கான ரேஷன் பொருட்கள் அனைத்தையும் நியாயவிலைக்கடை அலுவலர்கள் எங்கள் வீட்டிற்கே நேரடியாக வந்து வழங்கியுள்ளார்கள். எங்களைப் போன்ற வயதானவர்கள் ரேஷன் பொருட்கள் வாங்க ரேஷன் கடைக்குச் சென்று வரிசையில் நின்று வாங்கும் பொருட்களை வீட்டிற்கு எடுத்து வருவதற்கு மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் இத்தகைய சிறப்பான திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலைநோக்குச் சிந்தனையுடன் சிந்தித்துச் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்...

திரு. முருகேசன், திருமதி தவமணி

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயனடைந்த முதிய தம்பதி திரு. முருகேசன் மற்றும் திருமதி தவமணி அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்,

எங்களது பெயர் முருகேசன், தவமணி ஆகும். எங்களுக்கு முறையே 81, 72 வயதாகிறது. நாங்கள் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட டி.புதூர் பகுதியில் வசித்து வருகிறோம்.

நாங்கள் பையூர் பிள்ளைவயல் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்க கட்டுப்பாட்டில் செயல்படும் டி.புதூர் நியாயவிலைக் கடையிலிருந்து குடிமைப் பொருட்களைப் பெற்று வந்தோம்.

எங்களது குடும்பத்தினர் வேலை நிமித்தமாக வெளியூரில் வசித்து வருகின்றனர். வயது முதிர்வின் காரணமாக நாங்கள் எனது அன்றாட வேலைகளை மேற்கொள்வதற்கே மிகவும் சிரமமடைந்து வந்தோம். எங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவதற்குப் பிறரைச் சார்ந்தே வாழ்ந்து வருகிறோம். குறிப்பாக, மாதந்தோறும் குடிமைப்பொருட்கள் பெறுவதற்கென நியாய விலைக்கடைக்கு செல்வதற்கும் மிகவும் சிரமமடைந்து வந்தோம்.

நாங்கள் தினமும் தியானம் மேற்கொள்ளும் பொழுது, நியாய விலைக்கடை அருகில் அமைய வேண்டும் என வேண்டி வந்தோம். அதற்கேற்றார் போலவே, முதியோர்களின் சிரமத்தைப் போக்குகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" எனும் புதிய திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக எங்களைப் போன்ற 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு, அவர்களது இல்லத்திலேயே குடிமைப் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது எங்களுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது.

இவ்வாறு, தொலைநோக்குச் சிந்தனையுடன் சிந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதில், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டமானது மிகவும் சிறப்பாக உள்ளது. எங்களைப் போன்ற முதியோர்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிமைப் பொருட்களை இல்லத்திற்கே வந்து வழங்கி, எங்களின் நலன்காத்து மனிதநேயத்துடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்லாண்டு அனைத்து வளமுடனும் வாழ வேண்டும் என வாழ்த்தி, எங்களது மனமார்ந்த நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறோம் என முதிய தம்பதியினர் தெரிவித்தனர்.

மனிதநேயத்துடன் சிந்தித்துச் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்...

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயனடைந்த சிவகங்கை மாவட்டம், இளையான்குடி மைனர் தெருவைச் சேர்ந்த பயனாளி திரு. நாகூர் பிச்சை அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்,

திரு. நாகூர் பிச்சை

எனது பெயர் நாகூர் பிச்சை. நான் இளையான்குடி மைனர் தெருவில் வசித்து வருகிறேன்.

நான் மாற்றுத்திறனாளி என்பதால், எனது சில தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பிறரைச் சார்ந்திருத்தல் வேண்டும். அதில், ஒன்று நியாய விலைக்கடையிலிருந்து குடிமைப் பொருட்களைப் பெறுவதாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில், எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி, எங்களின் நலன் காத்து வருகிறார்கள்.

அதில், தற்போது எங்களது தேவைகளில் ஒன்றான குடிமைப் பொருட்களை, எவ்வித சிரமமுமின்றி எங்களது இல்லத்திற்கே நேரில், வாகனங்கள் மூலம் விநியோகம் செய்வதற்கும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" எனும் புதிய திட்டத்தினைத் தொடங்கி வைத்து, வழிவகை செய்துள்ளார்கள். அதிலும், பிரதி மாதந்தோறும் இரண்டாவது சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் குடிமைப்பொருட்கள் கிடைக்கப்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதும் சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

குறிப்பாக, 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் பிறரைச், சார்ந்தில்லாமல், தற்சார்பு நிலையில் இருந்திட வேண்டும் என மனிதநேயத்துடன் சிந்தித்து, "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" எனும் மகத்தானத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகளின் நலன் காத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனநிறைவுடன் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன் என மாற்றுத்திறனாளி பயனாளி திரு. நாகூர் பிச்சை அவர்கள் தெரிவித்தார்.

முன்னாள் படைவீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டம்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.08.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுத் துறை சார்பில் முன்னாள் படைவீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு "முதல்வரின் காக்கும் கரங்கள்" என்ற புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்து, 155 முன்னாள் படைவீரர்களுக்குத் தொழில் தொடங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை வழங்கினார்.

நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க, கொட்டும் மழையிலும், குளிரிலும் தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாது தாய் திருநாட்டிற்காக தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரர்களின் நலன் காக்க, இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்குத் தொகுப்பு ஊதியம் வழங்குதல், படைப் பணியில் போர், போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு, முன்னாள் படைவீரர்களுக்கு மறுவேலைவாய்ப்பு அளித்தல், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்குக் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்தார்

முதல்வரின் "காக்கும் கரங்கள்" திட்டம் தொடக்க விழா

கடந்த 2024ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தாய்நாட்டிற்காகத் தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வுபெற்ற முன்னாள் படைவீரர்களது பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்திடவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், "முதல்வரின் காக்கும் கரங்கள்" என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னாள் படைவீரர்களின் நலனிற்காக "முதல்வரின் காக்கும் கரங்கள்" என்ற புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்து, 155 முன்னாள் படைவீரர்களுக்குத் தொழில் தொடங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 15 முன்னாள் படைவீரர்களுக்கு ஆணைகளை

வழங்கினார். இத்திட்டத்தில், 155 பயனாளிகளுக்கானத் திட்ட செலவினமாக ரூ.24.43 கோடி, 30% மானியத்துடன் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் சுயதொழிலில் ஈடுபடவும், சிறந்த தொழில் முனைவோர்களாக மாற்றிடத் தேவையான நிதி, பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டத்தில் முதற்கட்டமாக 348 முன்னாள் படைவீரர்கள், அவர்தம் குடும்பத்தினர் பயனடைவர். இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் 50 கோடியே 50 இலட்சம் ரூபாயாகும்.

திட்டத்தின் விவரங்கள்

இத்திட்டத்தின்கீழ், முன்னாள் படைவீரர்கள் பல்வேறு தொழில் தொடங்குவதற்கு ஒரு கோடி ரூபாய் வரையில் வங்கியின் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டு, தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 30 விழுக்காடு மூலதன மானியமும், 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். மேலும், பயனடைவோருக்கு மூலதன மானியம், வட்டி மானியம் வழங்கப்படுவதால் கடன் சுமை குறையும்.

விண்ணப்பத் தேர்வு முறை

இத்திட்டத்தின் கீழ், முன்னாள் படைவீரர்களிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பங்களைக் கூர்ந்தாய்வு செய்வதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான தேர்வுப் பணிக்குழு (District level Task Force Committee) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிக்குத் தொழில் தொடங்குவதற்கான கடன் ஒப்புதல் வேண்டி பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வங்கிகளால் மேலும் சீராய்வு செய்யப்பட்டுத் தற்காலிக ஒப்புதல் (Provisional Sanction) ஆணை வழங்கப்படும்.

தொழில் முனைவோர் பயிற்சி

தொழில் தொடங்குவதற்கான வங்கியின் தற்காலிக ஒப்புதல் பெற்றவர்களுக்கு (Provisional Sanction) அரசு செலவில் சென்னை- தொழில் முனைவோர் மேம்பாடு, புத்தாக்க நிறுவனம் மூலம் தொழில் முனைவோர் மேம்பாடு பயிற்சி அளிக்கப்படும். இறுதியாகத் தொழில் தொடங்குவதற்குத் தேவைப்படும் கடனுதவி சம்பந்தப்பட்ட வங்கிகளால் கடன் இறுதி ஒப்பளிப்பு (Final Sanction of Loan) அளிக்கப்படும்.

வருங்காலங்களில் தமிழ்நாடு அரசு, நிதி நிறுவனங்களுடன் இணைந்து 500 முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

'முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்' முன்னாள் படைவீரர்களின் தியாகத்தையும் சேவையையும் அங்கீகரித்து, அவர்களுக்கு நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதிலும், அவர்தம் குடும்பங்களையும் சமூகத்தையும் வலுப்படுத்துவதிலும் அரசின் உறுதியை எடுத்துக்காட்டுகிறது. ●

படமும்/ செய்தியும்

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.08.2025 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

ஒன்றுபட்ட வலிமையே...
நாட்டின் வல்லமை...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி 15.08.2025 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் உரை

"தாயின் மணிக்கொடி பாரீர்! - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!"

- என்று நாம் தலைநிமிர்ந்து – நெஞ்சு நிமிர்த்தி பாட பாடுபட்ட விடுதலை வீரர்களையும் – அவர்களது குடும்பத்தினரையும் வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு அப்பாவு அவர்களே!

துணை முதலமைச்சர் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

மாண்பமை நீதி அரசர்களே!

சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே!

காவல்துறைத் தலைவர் உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகளே!

விடுதலைப் பெருவிழாவைக் கொண்டாடும் பேரன்புக்குரிய தமிழ்நாட்டு மக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கும் அதே வேளையில், நாம் இன்று விடுதலைக் காற்றைச் சுவாசிக்கக் காரணமாய் விளங்கும் தியாகிகளைப் போற்றி, அவர்களது உன்னத நோக்கங்கள் நிறைவேற நாளும் உழைக்க உறுதி எடுத்துக்கொள்வோம்.

இங்குப் பட்டொளி வீசிப் பறக்கும் நமது தேசியக் கொடியை, நான் மட்டுமல்ல – அனைத்து மாநில முதலமைச்சர்களும் இந்த நாளில் ஏற்றுவதற்கான ஜனநாயக உரிமையை 1974-ஆம் ஆண்டு இந்தியாவின் அனைத்து முதலமைச்சர்களுக்கும் பெற்றுத் தந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டை ஐந்து முறை ஆட்சி செய்த முத்தமிழறிஞர் கலைஞரின் வழித்தடத்தில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில், ஐந்தாவது ஆண்டாகத் தேசியக் கொடியை ஏற்றி வைக்கக்கூடிய வாய்ப்பை நான் பெற்றமைக்குப் பெருமை அடைகிறேன்! இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையினரின் அணிவகுப்பைப் பார்வையிடல்

நமது நாட்டின் பன்முகத்தன்மையின் அடையாளமாக விளங்கும் மூவண்ணக் கொடிக்குக் கம்பீரமாக வணக்கம் செலுத்துவதும், தியாகிகளைப் போற்றுவதும், நமது வாழ்நாள் கடமை மட்டுமல்ல: நாட்டுக்கும், தியாகிகளுக்கும் செலுத்தும் மரியாதை!

குமரி முதல் இமயம் வரை விரிந்த இந்த இந்திய நாட்டின் குறிப்பிட்ட சிலரோ - சில பகுதியினரோ மட்டும் போராடி பெற்றதல்ல இந்த விடுதலை. நாடு முழுவதும், அனைத்து மாநில மக்களும், அனைத்துத் தேசிய இன மக்களும், அனைத்து மொழியினரும், அனைத்து மதப் பிரிவைச் சேர்ந்தவர்களும், அனைத்துப் பண்பாட்டைப் பின்பற்றுபவர்களும், தங்களது வியர்வையை – இரத்தத்தை - உணர்வை – உயிரைக் கொடுத்துப் பெற்றது இந்த விடுதலை!

அதனால்தான், ‘அனைவருக்குமான இந்தியாவாக’ நமது நாடு எப்போதும் இருக்க வேண்டும் என்று நமது தலைவர்கள் கனவு கண்டார்கள். அவர்களது கனவை நிறைவேற்றுவதுதான் அவர்களுக்குச் செலுத்தக்கூடிய உண்மையான புகழஞ்சலி!

தியாகத்தில், போராட்டத்தில், களத்தில் சளைத்தவர்கள் அல்ல தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை வரலாறு சொல்லும்!

அந்தத் தியாகிகளை, பெயரளவில் நினைவுகூர்ந்து மறப்பவர்கள் அல்ல நாம்!

அதன் அடையாளம்தான், இன்றைக்குத் தமிழ்நாட்டில் பார்க்கும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மணிமண்டபங்கள் - சிலைகள்! இவற்றில் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டன.

★ பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கோட்டை!
★ மகாகவி பாரதி இல்லம்!
★ பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம்!
★ மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம்!
★ தில்லையாடி வள்ளியம்மை மணிமண்டபம்!
★ வீரவாஞ்சிநாதனின் உறவினருக்கு நிதி!
★ கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. இழுத்த செக்கு நினைவுச் சின்னமானது!
★ பசும்பொன் திருமகனாருக்கு மணிமண்டபம்!
★ விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவச பேருந்துப் பயணம்; மாதந்தோறும் நிதி!
★ தியாகிகள் மணிமண்டபம்!
★ விடுதலைப் பொன்விழா நினைவுச் சின்னம்!
★ மாவீரர் பூலித்தேவர் நினைவு மண்டபம்!
★ தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு!
★ மாவீரர் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு!
★ நேதாஜிக்கு சிலை!
★ கக்கனுக்குச் சிலை!
★ சிப்பாய் புரட்சிக்கு நினைவுத்தூண்!

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்
முப்படைகளின் உயர் அதிகாரிகளையும், அறிமுகப்படுத்தல்

- என நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றிய அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு!

இந்த வரிசையில், இன்றைய திராவிட மாடல் ஆட்சியிலும் தொடர்ந்து தியாகிகளைப் போற்றி வருகிறோம்.

★ விடுதலை நாளின் 75-ஆவது ஆண்டு பெருவிழாவையொட்டி வெகுசிறப்பாக நாம் கொண்டாடினோம்.

★ செக்கிழுத்த செம்மல் - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டு செயல்படுத்தினோம்.

★ வ.உ.சி.மறைந்த நவம்பர் 18 தியாகத் திருவுருவ நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ மகாகவி பாரதியார் நூற்றாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்புகளை வெளியிட்டு செயல்படுத்தியுள்ளோம்.

★ உத்திரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பராமரிக்கவும், புதுப்பிக்கவும் அரசின் சார்பில் 18 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் முடிந்து ஒப்படைக்கப்பட்டன.

★ கிண்டி காந்தி மண்டபத்தில், வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலையும், மருது சகோதரர்கள் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன.

★ கடலூரில் அஞ்சலை அம்மாள் சிலை வைக்கப்பட்டுள்ளது.

★ விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி - ஒளி காட்சிகள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ காந்தி மண்டபம், அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராசர் மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த 3 கோடியே 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ விடுதலைப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்குத் திருப்பூர் மாவட்டத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

★ தனது வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டுக்கு வந்தவர் அண்ணல் காந்தியடிகள். அரையாடை அணிவது என்ற முடிவை மதுரை மண்ணிலிருந்து தான் காந்தியடிகள் எடுத்தார். இதன் அடையாளமாகச் சென்னை அருங்காட்சியக வளாகத்தில் காந்தியடிகளின் நினைவுச் சிலையை அமைத்துள்ளோம்.

★ விடுதலைப் போராட்டத்தின் பவள விழாவையொட்டி, கடந்த ஆண்டு தியாகிகளுக்கான ஓய்வூதியத்தை 20 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தியுள்ளோம்.

★ அதேபோல், விடுதலைப் போராட்ட வீரர்களின் வழித்தோன்றல்களுக்கும் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறோம்.

★ முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர்களுக்காக 'காக்கும் கரங்கள்' திட்டத்தினை அறிவித்திருந்தேன். இந்தத் திட்டத்தினை வரும் 19-ஆம் நாள் துவங்கி வைக்க உள்ளேன்.

அந்தத் திட்டத்தின்கீழ், முன்னாள் படைவீரர்கள் மாவட்டக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, இந்தப் படைவீரர்களின் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 848 அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டன. இதில் 348 விண்ணப்பங்கள் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டு அனைவருக்கும் தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டது. தொழில்முனைவோர் பயிற்சி பெற்ற முன்னாள் படைவீரர்களுக்கு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தல்

வழங்கப்படும் கடன் தொகையில் 30 விழுக்காடு மானியம் அரசால் வழங்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1967-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைவதற்கு முன்பு,

சென்னையில் காந்தி மண்டபம், கன்னியாகுமரியில் காந்தி நினைவு மண்டபம், ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. அவர்களது இல்லம் என விடுதலைப் போராட்ட வீரர்களுக்காகத் தமிழ்நாட்டில் மூன்று நினைவு மண்டபங்கள்தான் இருந்தன.

திராவிட முன்னேற்றக் கழக அரசு தியாகிகளையும், தியாகத்தையும் போற்றும் அரசு என்பதால்தான், நமது கழக ஆட்சிக்காலங்களில், இத்தனை நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன.

தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்கள் விடுதலை நாள் பற்றிச் சொல்லும்போது, "1947 ஆகஸ்டு 15-ஆம் நாள், நாம் ஆங்கிலேயரின் கணக்கைத் தீர்த்த நாள்! அதன்பின் ஒவ்வொரு ஆண்டிலும், வரும் சுதந்திரத் திருநாள், நாட்டிற்காகவும் - நம் நாட்டு மக்களுக்காகவும் நாம் ஆற்றியுள்ள பணிகளைக் கணக்குப் பார்க்கும் நாள்" என்றார்.

அந்த வகையில், நமது திராவிட மாடல் ஆட்சி அமைந்த இந்த நான்காண்டுக் காலத்தில் நிறைவேற்றியுள்ள திட்டங்களை நினைத்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த காலத் தியாகிகளைப் போற்றும் அதே வேளையில், இன்றைய மக்களையும் - வருங்காலத் தமிழ்நாட்டையும் வளர்த்தெடுக்கும் அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

14 ஆண்டுகளுக்குப் பிறகு, நமது திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, 11.19 விழுக்காடாக அதிகரித்து, மாபெரும் உச்சத்தைத் தொட்டிருக்கிறது.

இந்த ஆண்டு தொடக்கத்தில், தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது சொல்லியிருந்த 9.69 விழுக்காட்டைவிட இது கிட்டத்தட்ட 1.5 விழுக்காடு அதிகம்!

இந்தியாவிலேயே மிக விரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரமாகத் திகழ்கிறது தமிழ்நாடு. இது வேறு எந்தப் பெரிய மாநிலமும்

பெற்றிராத மாபெரும் வளர்ச்சி! ஏன், நாட்டினுடைய வளர்ச்சியே 6.5 விழுக்காடுதான். ஆனால், தமிழ்நாடு 11.19 விழுக்காடு வளர்ச்சி அடைந்துள்ளது. எங்களை நம்பி ஆட்சியை ஒப்படைத்த தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி இது!

சில முக்கியமான புள்ளிவிவரங்களை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

★ நிதி ஆயோக் வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான குறியீட்டில் தமிழ்நாடு 788 புள்ளிகளுடன் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

★ சமூக முன்னேற்றக் குறியீடுகளில் பெரிய மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாடு 63.33 புள்ளிகள் பெற்றுத் தேசிய அளவில் முதலிடத்தில் உள்ளது.

★ இந்தியாவில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்கள்தொகை 11.2 விழுக்காடு. ஆனால், தமிழ்நாட்டில் 1.43 விழுக்காடு மக்கள்தான் வறுமைக் கோட்டுக்குக்கீழ் இருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திடும் பணியில் நமது திராவிட மாடல் அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

★ 10 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள்; அதன் மூலம் 30 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பையும் உருவாக்கியுள்ளோம்.

★ பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 47 விழுக்காடு!

★ Startup தரவரிசைப் பட்டியலில், 2018-இல் கடைசி இடத்தில் இருந்து, 2022-இல் முதலிடத்துக்கு முன்னேறி இப்போது Best Performer!

★ ஏற்றுமதி தயார்நிலை குறியீட்டில் இந்திய நாட்டிலேயே 80.89 புள்ளிகளுடன் முதல் இடம்!

★ மின்னணுச் சாதனங்கள் ஏற்றுமதியில், தேசிய அளவில் 37 விழுக்காடு பெற்று நாட்டிலேயே முதன்மை மாநிலம்!

★ ஜவுளி, தோல் பொருட்களின் ஏற்றுமதியில் முதன்மையான மாநிலம்!

★ ஒட்டுமொத்த நாட்டின் காலணி உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு, 38 விழுக்காடு!

★ 2024-ஆம் ஆண்டிற்கான இந்திய விளையாட்டு விருதுகளில், விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் நமது தமிழ்நாடு!

★ மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பாகச் சேவை புரிந்ததற்கு முதல் மாநிலமாக விருது!

★ மகப்பேறு சிக்கல்கள் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிந்து சிகிச்சை வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம்!

★ காசநோயை ஒழிக்க தமிழ்நாடு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டி - தமிழ்நாட்டின் ஒன்பது மாவட்டங்களுக்கு விருதுகள்!

★ காகிதம் இல்லா சட்டமன்றத் திட்டத்தினை மிகச் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்படுத்தியமைக்காக ஒன்றிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சகம் விருது!

★ உணவு பதப்படுத்தும் குறு, சிறு நிறுவனங்களின் சிறந்த செயல்திறனுக்காக விருது!

★ மாநிலக் கூட்டுறவு வங்கியின் சிறந்த சேவைக்கான விருது!

★ மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்துக்கு ஐ.நா.விலேயே விருது!

இப்படி பல்வேறு விருதுகளைப் பெற்றுச் சிறப்பான மாநிலமாக - உன்னதமான மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது.

சமூகநீதி - சமத்துவம் - சுயமரியாதை - மொழிப்பற்று - இன உரிமை - மாநிலச் சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் நிற்கும் ஆட்சிதான், திராவிட மாடல் ஆட்சி!

தொழில் வளர்ச்சி - சமூக மாற்றம் - கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும். வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும்.

பொருளாதாரம் - கல்வி - சமூகம் - சிந்தனை - செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளர வேண்டும். அதுதான் தந்தைப் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் காண விரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி!

கடந்த நான்காண்டு காலத்தில் தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சியைப் பாருங்கள்... அது ஒற்றைத்துறை வளர்ச்சியாக இல்லாமல், பல்துறை வளர்ச்சியாக இருக்கிறது. அனைத்து மாவட்டங்களும் வளர்ந்து வருவதை நீங்கள் பார்க்கலாம். அனைத்து மக்களும், சமூகப் பிரிவும் வளர்ந்து வருவதை நீங்கள் காணலாம்.

★ மகளிரின் தன்னம்பிக்கையை உயர்த்தியிருக்கும் - ஒரு கோடியே 14 இலட்சம் பெண்களுக்கு மாதந்தோறும் உரிமைத்தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்!

★ மகளிரின் சேமிப்பையும் – சமூகப் பங்களிப்பையும் அதிகரித்துள்ள பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணம்!

★ மாணவர்களிடையே கல்விப் புரட்சியை உருவாக்கியுள்ள திட்டங்கள் - புதுமைப்பெண்! தமிழ்ப்புதல்வன்! நான் முதல்வன்!

★ 18 இலட்சம் பள்ளி மாணவர்களின் மனவலிமையையும், உடல்வலிமையையும் அறிவு வலிமையையும் அதிகரித்துள்ள காலை உணவுத் திட்டம்!

★ அதுமட்டுமல்ல, மக்களுக்கு நெருக்கமாகச் செல்லக் கூடிய திட்டங்கள் - உங்களுடன் ஸ்டாலின்! நலம் காக்கும் ஸ்டாலின்!

★ 21 இலட்சம் முதியோர், மாற்றுத்திறனாளிகளின் இல்லம் தேடி ரேசன் பொருள்களை வழங்கும் தாயுமானவர் திட்டம்!

- இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஏழை எளிய மக்களின் தேவைகளை உணர்ந்து, அவர்கள் கேட்பதற்கு முன்னதாகவே அவற்றை நிறைவேற்றித் தரும் அரசு - உங்கள் திராவிட மாடல் அரசு! இந்த வீர விடுதலைத் திருநாளிலும் ஒன்பது முக்கியமான அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

முதல் அறிவிப்பு –

மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தற்போது வழங்கிவரும் மாதாந்திர ஓய்வூதியம் 22 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு –

மாநில அரசு விடுதலைப் போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்குத் தற்போது வழங்கிவரும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

மூன்றாவது அறிவிப்பு –

வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், முன்னாள் இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள், சிவகங்கை மருது சகோதரர்கள் வழித்தோன்றல்கள் மற்றும்

வ.உ.சிதம்பரனார் வழித்தோன்றல் பெற்றுவரும் மாதாந்திரச் சிறப்பு ஓய்வூதியம் 11 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

நான்காவது அறிவிப்பு –

இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு –

இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற வீரர்களின் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

ஆறாவது அறிவிப்பு –

தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் வசதிக்காகச் சென்னை, மாதவரத்தில் 33 ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் உட்கட்டமைப்புடன் கூடிய முன்னாள் படை வீரர்கள் தங்கும் விடுதி 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஏழாவது அறிவிப்பு –

தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

எட்டாவது அறிவிப்பு –

ஓட்டுநர் பயிற்சி பெற மாநில அளவில் ஒரு பயிற்சி மையம், மண்டல அளவில் இரண்டு பயிற்சி மையங்கள், மாவட்டத்திற்கு ஒரு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி ஆகியவை தொடங்கப்படும்.

ஒன்பதாவது அறிவிப்பு –

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், பதிவுபெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள் கல்லூரியில் படிக்கும்போது, திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்புப் பெற, நவீனத் தொழில்நுட்பங்களில் பத்தாயிரம் மாணவர்களுக்கு 15 கோடி ரூபாய் செலவில் இணைய வழியில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

இந்த ஒன்பது அறிவிப்புகளும் விரைவில் செயல்படுத்தப்படும்!

வேற்றுமையில் ஒற்றுமையும் - ஒற்றுமையின் மூலமாக ஒருமைப்பாட்டையும் - ஒருமைப்பாட்டின் மூலமாக ஒன்றுபட்ட வளர்ச்சியையும் வழங்க வேண்டும். ஒன்றுபட்ட வலிமையே நாட்டின் வல்லமை!

பல மாநிலங்கள், பல மொழிகள், பல பண்பாடுகள், பல மதங்களைச் சார்ந்த கோடிக்கணக்கான மக்களை உள்ளடக்கிய துணைக்கண்டம்தான் இந்தியா. அனைத்து வேற்றுமைகளையும் கடந்து, நாம் பீடுநடை போட, அனைவரும் இந்தியராய் ஒருங்கிணைந்து செயல்படக் காரணம், நமது அரசியலமைப்புச் சட்டம்! புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் வகுத்தளித்த இந்த வரலாற்றுச் சாசனத்தில், ஒன்றிய அரசும் - மாநில அரசுகளும் இணைந்து மக்கள் பணியாற்றுவதற்குத் தேவையான அதிகாரப் பகிர்வு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆனால், கடந்த 75 ஆண்டுகளில், நமது அரசியல் களம் கண்ட மாற்றங்களால், இந்த அதிகாரப் பகிர்வில் மாநில அரசுகளின் பங்கு தொடர்ந்து குறைந்து வருவது வருத்தமளிக்கிறது. மேலும், கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு துறைகளில் மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் பல முயற்சிகளையும் ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் நிலையையும் நாம் காண்கிறோம். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிட, மக்களுக்கு அருகில் இருந்து செயல்படும் மாநில அரசுகளுக்குப் படிப்படியாகக் கூடுதல் அதிகாரங்கள் தேவைப்படும் சூழலில், இதற்கு நேர்மாறாகக் கல்வி, மருத்துவம் போன்ற முக்கியத் துறைகளில், மாநில அரசுகளின் உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன.

ஒன்றிய அரசின் சட்டங்கள் மூலமாகவும், நீதிமன்றத் தீர்ப்புகளாலும், மாநில அரசுகளுக்கான நிதிப் பங்கீட்டிலும், திட்டங்களிலும் ஒன்றிய அரசு காட்டும் பாரபட்சத்தாலும், ஒன்றிய அரசைச் சார்ந்து இருக்கும் நிலைக்கு மாநில அரசுகள் தள்ளப்பட்டு வருகின்றன. இவற்றைக் களைந்திட ஒன்றிய – மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரம் மற்றும் நிதிப் பகிர்வில் மாநில அரசுகளின் பங்கினை மீட்டெடுத்திட, அரசியல் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதுதான் ஒரே தீர்வு! இதற்கான முன்முயற்சிகளை நிறைவேற்றி முடிப்பதற்கான தக்க தருணம் தற்போது வந்துவிட்டது என இந்த விடுதலை நாளில் உறுதியாக நம்புகிறேன்.

மாநிலத்துக்குக் கிடைக்க வேண்டிய, தரப்பட வேண்டிய நிதியை எப்போதும் போராடி, வாதாடி, வழக்குப் போட்டுப் பெற வேண்டிய நிலைமையில் இருப்பது கூட்டாட்சி இந்தியாவுக்கு அழகல்ல. இது மாநிலத்தின் வளர்ச்சியையும் பாதிக்கும், இந்தியாவின் வளர்ச்சியையும் பாதிக்கும்.

சுயசார்புடனும், தனித்துவமான அடையாளங்களுடனும் ஒவ்வொரு மாநிலமும் செழித்து வளரும்போது தான் ஒன்றுபட்ட வலிமையான இந்தியத் திருநாடு உலக அரங்கில் உயர்ந்து நிற்கும்!

தமிழ்நாட்டின் உன்னதமான கோட்பாடுகளை இந்தியா முழுமைக்கும் செயல்படுத்திக் காட்டும் கடமையும், பொறுப்பும் நமக்கு உண்டு.

தமிழ்நாட்டு மக்களுக்கு உங்களில் ஒருவனாக, இந்திய நாட்டு மக்களுக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சராக - எனது மனமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்!

டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் விருதாளர்
முனைவர் வ. நாராயணன் அவர்கள்

கல்பனா சாவ்லா விருதாளர்
செல்வி துளசிமதி முருகேசன் அவர்கள்


தகைசால் தமிழர் விருதாளர்
பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்கள்

"வேர்களைத் தேடி" திட்டத்தின்கீழ் 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்களுக்கானத் தமிழ் பண்பாட்டுப் பயணம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பயணத்திற்கானப் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.08.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி" திட்டத்தின்கீழ், 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு, 01.08.2025 முதல் 15.08.2025 வரையிலான தமிழக பண்பாட்டுப் பயணத்திற்கான பயணக் குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை, உடைகள் போன்ற பொருட்களை வழங்கித் தொடங்கி வைத்தார்.

புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்களைத் தாய்த் தமிழ்நாட்டின் "மரபின் வேர்களோடு" உள்ள தொடர்பைப் புதுப்பிக்கும் வண்ணமும், தமிழ் கலை, பண்பாடு, கலாச்சாரத்தினை அயலகத் தமிழர்களிடையே பரிமாற்றம் செய்யும் வகையிலும், ஆண்டுதோறும் 200 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து, தமிழின் தொன்மை, தமிழர்களின் வாழ்வியல், கலாச்சாரம், கட்டடம்/சிற்பக்கலை, நீர் மேலாண்மை, ஆடைகள், ஆபரணங்கள், கலை இலக்கியப் பண்பாடு, தொல்லியல் ஆய்வுகள், அறிஞர்கள், சான்றோர்களுடன் கலந்துரையாடல் போன்ற கலாச்சாரப் பரிமாற்ற சுற்றுலாத் திட்டமான "வேர்களைத் தேடி" என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.05.2023 அன்று சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் கலைப் பண்பாட்டு நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின்படி, அயலகத்தில் வாழும் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாட்டுக்கு அழைத்துவந்து, தமிழ், தமிழர்களின் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு, தமிழ்நாடு அரசு சார்பில் அழைத்துச் செல்லப்படுவர்.

அதன் அடிப்படையில், இந்தப் பண்பாட்டுப் பயணம் அயலகத் தமிழர் நலத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 17 நாடுகளைச் சேர்ந்த 194 தமிழ் இளைஞர்களைக் கொண்ட மூன்று கட்டப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் நான்காம் கட்டப் பயணமாக, பிஜி, ரீயூனியன், மார்டினிக், குவாடலூப், இந்தோனேசியா, தென் ஆப்பிரிக்கா, மியான்மர், மொரிஷியஸ், மலேசியா, இலங்கை, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி ஆகிய 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்கள் 01.08.2025 அன்று முதல் 15.08.2025 வரையிலான பதினைந்து நாட்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர். இப்பயணத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இப்பயணத்தில் பங்குபெறும் அயலகத் தமிழ் இளைஞர்கள் அவர்களது நாட்டில் தமிழ்நாட்டின் கலாச்சார தூதுவர்களாகச் செயல்பட்டு தமிழர்களின் கலாச்சாரப் பெருமைகளை அவர்களது நாடுகளில் பரப்புவர்.

ஒளிரும் திறன் மிளிரும்

மந்தி கை மாலையென
இந்தி கைத் தமிழர், ஆக
வஞ்சகச் சூழ்ச்சிகள் வலையாக விரிந்தபோது
அஞ்சிடா நெஞ்சுகொண்டு அறுத்தவர் பெரியார்தானே?
அவர்,
பாதம் படாத பட்டி தொட்டி உண்டோ-அவர் பேர் கேட்டுக்
காதம் ஓடுகின்ற ஆத்திகரும் (அவர்) பேசக் கேட்டால்,
தமிழ்க் கீதம் கேட்ட கிறுகிறுப்பில் மயங்கிப்போவார்,
அறிவு மழை பொழியும் எழில்
வழியும் – இருள்கழியும்
தெளிவுமிகு உரைகள் பல
ஒளிரும் திறன் மிளிரும் –
கடலின்மடை அலையின்ஒலி – மலையின் முடி –
தழுவும் முகில் வழியும்! அறிவு மழை பொழியும்!
ஆணவங்கள் அழியும்! அடிமை முறை ஒழியும்,
அவர் தலைமை ஏற்று நானும் அவருடனே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில்
ஆருரில் மாணவனாய் இருந்தபோதே இணைந்துவிட்டேன்,
அதன்பிறகு புதுவையில் நான் தாக்குண்டபோது
அய்யாவின் கையாலே மருந்திட்டார், என் காயத்திற்கு!
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்றகாலை – நான்
தமிழரசுத் தலைவனாக வருவேன் என்றும்,
எனைவளர்த்த தந்தைக்கு அரசு மரியாதையுடன்
இறுதி வணக்கம் செய்வேன் என்றும்,
எண்ணியும் பார்த்ததில்லை.

– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்
சேலம் மாவட்டம், நேரு கலையரங்கில்
தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 11.01.1974 அன்று
நடைபெற்ற தந்தைப் பெரியார் கவியரங்கில்
ஆற்றிய கவிதை முன்னுரை...

கோயம்புத்தூர் மாவட்டத்தில்

ரூ.2.83 கோடி செலவில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பணியின்போது ஏற்பட்ட விபத்தில் உயிர் நீத்தவர்களுக்கு நினைவு மண்டபம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.08.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியிலுள்ள நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு "சி. சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டப்பட்டு அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் தொடங்க முக்கியக் காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராசர், முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே. பழனிசாமி, பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆகியோருக்கு நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை திறந்து வைத்தார். மேலும், அவ்வளாகத்தில் 4 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "வி.கே. பழனிசாமி அரங்கம்", "பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அரங்கம்" ஆகியவற்றையும், ஆழியாறு அணையின் பூங்காவில் 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவு மண்டபத்தையும் திறந்து வைத்தார்.

பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத் திட்டம்

பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டம் மூலம் தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்கள் பாசன வசதி பெறுவதுடன் குடிநீர் ஆதாரமாகவும் இத்திட்டம் இருந்து வருகிறது. மேலும், கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டம், சித்தூர் தாலுகாவின் பாசன வசதிக்கும் குடிநீர்த் தேவைகளுக்கும் இந்தத் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் பின் பகுதியில் அமைந்துள்ள கோவை மாவட்டத்தின் ஒரு பகுதி வறண்டும் போதிய மழையின்றியும் அமைந்திருந்தது. மேற்கு நோக்கிச் செல்லும் சில ஆறுகளை திருப்பி இப்பகுதி மக்களின் வாழ்வை மலரச் செய்ய அப்போதைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான அரசு உறுதி பூண்டு, பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு-கேரளம் ஆகிய இரு மாநிலங்களுக்கும் பொதுவான ஆறுகளின் நீரை பகிர்ந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. தமிழ்நாடு-கேரள கூட்டுறவின் அடையாளமாக இந்தத் திட்டம் 1962-ஆம் ஆண்டு நிறைவடைந்து செயல்பாட்டுக்கு வந்தது.

பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தில் எட்டு ஆறுகள் இணைக்கப்படுகின்றன. ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆறு, தூணக்கடவு ஆறு, பெருவாரிப்பள்ளம் ஆறு ஆகிய ஆறுகள் ஆனைமலைக் குன்றுகளிலும், ஆழியாறு, பாலாறு ஆகியவை சமவெளியிலும் அமைந்துள்ளன. இந்நதிகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டு ஒன்றில் தேங்கும் நீரை மற்றொன்றுக்குச் சுரங்கங்கள் வாயிலாக இணைத்து, கோவை மாவட்டத்தின் சமவெளிப்பகுதியிலும் கேரள மாநிலத்தில், சித்தூர் பகுதியிலும் பாசனத்திற்கும் பயன்படுத்தப்படும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தற்போது சுமார் 3 இலட்சத்து 77 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வருகின்றன.

வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள் 1937-ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தன்னுடைய முதல் சட்டமன்ற உரையில் பொள்ளாச்சி பகுதியில் நிலவிய கடும் வறட்சியும், ஆனைமலை குன்றுகளின் மற்றொரு பகுதியில் பயனில்லாமல் கடலுக்குச் சென்ற பரம்பிக்குளம் ஆற்றின் குறுக்கே அணைகட்டி அந்நீரினை திருப்பிவிட்டால் இப்பகுதி செழிப்படையும் என்று எடுத்துரைத்துப் பரம்பிக்குளம் ஆழியாறு அணை கட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அவரது பெரும் முயற்சியால் இத்திட்டம் குறித்து ஆய்வு செய்ய பொறியாளர் ஆனந்த்ராவ் நியமிக்கப்பட்டார். இவர்கள் இருவரும் இணைந்து ஆய்வு செய்து, அணை கட்டுவது சாத்தியம் என்ற அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தனர். அதனைத் தொடர்ந்து பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத் திட்டத்தின் உயிர்நாடியான பரம்பிக்குளம் அணைக் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கிட அப்போதைய நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோர் உறுதுணையாக இருந்தார்கள்.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தைச் செயல்படுத்திட உழைத்த பெருந்தலைவர் காமராசர், திரு. சி.சுப்பிரமணியம், திரு. வி.கே.பழனிசாமி, திரு. பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவு மண்டபம், "வி.கே. பழனிசாமி அரங்கம்", "பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அரங்கம்" திறந்து வைத்தல்

2021-2022 ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் உருவாக முக்கியக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ஆழியாறு அணையின் பூங்காவில் நினைவு மண்டபம், மார்பளவுச்சிலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனை பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப்பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவுமண்டபமாக மாற்றி அமைக்கப்படும்.

திருவுருவச் சிலைகள் திறப்பு

மேலும், பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு ஒன்றிய அரசின் மறைந்த முன்னாள் அமைச்சர் "சி.சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டப்படும்.

இவ்வளாகத்தில், விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள், கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட ஏதுவாக இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கு கட்டமைக்கப்படும். இவ்வரங்கத்திற்கு "வி.கே.பழனிசாமி அரங்கம்" எனப் பெயர்சூட்டப்படும். மேல்தளத்தில் அமைக்கப்படும் அரங்கத்திற்குப் "பொள்ளாச்சி நா.மகாலிங்கம்" அவர்களின் பெயர் சூட்டப்படும். இம்மண்டபத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டப்பணிகள் குறித்துப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்படும்.

மேலும், இவ்வளாகத்தில் பெருந்தலைவர் காமராசர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே. பழனிசாமி கவுண்டர், முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம், ஆகியோரைப் பெருமைப்படுத்துகின்ற வகையில், அவர்களது முழுத்திருவுருவச் சிலைகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியிலுள்ள நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு "சி. சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டப்பட்டு, அவ்வளாகத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் தொடங்க முக்கியக் காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராசர், முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்

வி.கே. பழனிசாமி, பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆகியோருக்கு நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், இவ்வளாகத்தில் விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள், கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திடும் வகையில் 4 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு தளங்கள் கொண்ட "வி.கே. பழனிசாமி அரங்கம்", "பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அரங்கம்" ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, ஆழியாறு அணையின் பூங்காவில் 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவு மண்டபத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர், இன்றைய இளைய தலைமுறையினர், பொதுமக்கள் நீர்மேலாண்மையின் முக்கியத்துவத்தையும், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பணிகள் குறித்து அறிந்திடும் வகையிலும் வி.கே. பழனிசாமி அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்புத் திட்டங்கள்

- தூய்மைப் பணியாளர்கள் குப்பைகளைக் கையாளும்போது அவர்களுக்கு நுரையீரல், தோல் சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே, இத்தகைய தொழில்சார் நோய்களைக் கண்டறிவதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும் தேவையான தனித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

- தற்போது தூய்மைப் பணியாளர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால், அவர்களுக்குத் தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் மூலமாக, நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. தூய்மைப் பணியாளர்களின் குடும்பங்களின் எதிர்கால நலன்களையும், வாழ்வாதாரத்தையும் முழுமையாக உறுதி செய்யக்கூடிய வகையில், இந்த நிதியுதவியுடன் கூடுதலாக இந்தப் பணியாளர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் அளவிற்குக் காப்பீடு இலவசமாக வழங்கப்படும். இதனால், பணியின் போது இறக்க நேரிடும் தூய்மைப் பணியாளர்கள் குடும்பங்களுக்கு 10 இலட்சம் ரூபாய் கிடைப்பதற்கு வழிவகை ஏற்படும்.

- தூய்மைப் பணியாளர்கள், அவர்களின் குடும்பத்தினரின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்திட சுய தொழில் தொடங்கும்போது, அத்தொழில் திட்ட மதிப்பீட்டில், 35 விழுக்காடு நிதி அதிகபட்சமாக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படும். மேலும், இந்த கடனுதவியைப் பெற்றுத் தொழில் தொடங்கி கடன் தொகையைத் தவறாமல் திருப்பிச் செலுத்துவோருக்கு 6 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். இந்தப் புதிய திட்டத்திற்கு ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

- தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகள் எந்தப் பள்ளியில் பயின்றாலும், அவர்களுக்கு உயர் கட்டணச் சலுகைகள் மட்டுமின்றி, விடுதிக் கட்டணம், புத்தகக் கட்டணங்களுக்கான உதவித் தொகையை வழங்கிடும் வகையில், "புதிய உயர் கல்வி உதவித் தொகை திட்டம்" ஒன்று செயல்படுத்தப்படும்.

- நகர்ப்புரங்களில், சொந்த வீடு இல்லாத தூய்மைப் பணியாளர்களுக்கு வரும் மூன்று ஆண்டுகளில், தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் உதவியோடு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டங்கள், தூய்மைப் பணியாளர்கள் வசிக்கும் இடத்திலேயே வீடு கட்டுதல் எனப் பல்வேறு முறைகளின் கீழ் 30,000 குடியிருப்புகள் கட்டித் தரப்படும். கிராமப் பகுதிகளில் வசிக்கும் தூய்மைப் பணியாளர்களுக்குக் "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படும்.

- தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில், காலை உணவு சமைப்பதற்கும், அதைப் பணிபுரியும் இடத்திற்கு கொண்டுவந்து அருந்துவதற்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சனைகளுக்குத் தீர்வாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்குக் காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாகப் பெருநகரச் சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தில்

ரூ.1,300 கோடி முதலீட்டில் வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின்வாகன உற்பத்தி ஆலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.08.2025 அன்று தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் சிலாநத்தம் தொழிற்பூங்காவில் வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின் வாகன உற்பத்தி ஆலையைத் தொடங்கி வைத்தார். 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 16,000 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட முதலீடு, 3,500 நபர்களுக்கு உறுதி செய்யப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பதினெட்டு மாதங்களுக்குள் முதற்கட்டமாக, 1,300 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின்வாகன உற்பத்தி ஆலையைத் தொடங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்துவதற்கும் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் கொள்கைக்கேற்ப ஈர்க்கப்படும் தொழில் திட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு, இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்த்திட 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், வின்ஃபாஸ்ட் நிறுவனத்துடன்



புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட அடுத்த மாதத்திலேயே, அதாவது பிப்ரவரி 2024 ஆம் மாதம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். ஆலைக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்ட 18 மாதங்களில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டத்தின் முதற்கட்ட உற்பத்தி தொடங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு துரிதமாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பல துறைகளில் சிறந்து விளங்கும் வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின் குழுமத்தின் ஒரு அங்கமான வின்ஃபாஸ்ட் நிறுவனம், தனது புதிய அதிநவீன மின் வாகன உற்பத்தி ஆலையை, தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் சிலாநத்தம் தொழிற் பூங்காவில் அமைத்துள்ளது. வின்ஃபாஸ்ட் நிறுவனம், இந்த ஆலையில், ஆண்டுக்கு 50,000 கார்கள் உற்பத்தி செய்யும் அளவிற்கான தொழிற்சாலையை நிறுவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கார்கள், இருசக்கர வாகனங்களின் உற்பத்தி தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் மட்டும் இருந்து வரும் நிலையில், முதன்முறையாகத் தென் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தப் பெரும் தொழில் திட்டம் இப்பகுதியின் அடுத்தகட்ட தொழில் வளர்ச்சிக்கும் இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கும் வழி வகுக்கும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்விற்கு, வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகளை நான் இந்த நேரத்தில் மனதார வரவேற்கிறேன்!

வியட்நமிஸ் மொழியில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், சாமுன் நேஓய் வின்ஃபாஸ்ட் தமிழ்நாடு.

தெற்காசியாவின் மிகப்பெரிய குழுமங்களில் ஒன்றாக இருக்கக்கூடிய பெருமைமிகு வின் குழுமம், முதலீடுகளுக்காக, தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்ததற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெருமையாகவும் இருக்கிறது!

வியட்நாம் என்றாலே வியப்புதான்! அந்த வியட்நாம் நாட்டை சேர்ந்த வின்ஃபாஸ்ட், நான் அடிக்கல் நாட்டி, 18 மாதத்தில் தமிழ்நாட்டில் தன்னுடைய நிறுவனத்தைத் தொடங்கி, நமக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்!

நம்முடைய தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும் இந்தப் பெருமையில் பெரும் பங்குண்டு!

டி.ஆர்.பி. ராஜாவின் உழைப்புக்கு இந்த வின்ஃபாஸ்ட்டே சாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

இ-வாகனங்கள் உற்பத்தியில் முன்னணி நிறுவனமாகவும், நிலைத்தன்மை கொண்ட போக்குவரத்தை முன்னெடுக்கும் நிறுவனமாகவும் இருக்கும் வின்பாஃஸ்ட், தமிழ்நாடு மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு, தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்!

இந்தியாவின் மொத்த மின் வாகன உற்பத்தியில், 40 விழுக்காடு தமிழ்நாட்டில் இருந்துதான் உற்பத்தியாகிறது! தமிழ்நாடுதான், இந்தியாவின் வாகன உற்பத்தி, மின் வாகன உற்பத்தியின் 'கேப்பிட்டல்' என்று நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்வேன்! சென்னை தான் இந்தியாவின் டெட்ராய்ட்! திருப்பெரும்புதூரில் எப்படி முதல் கார் உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டதோ, அதேபோன்று, இன்றைக்குத் தூத்துக்குடியில் முதல் மின்வாகன உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது! இதன்மூலம் தமிழ்நாட்டிற்கும், வியட்நாமிற்கும் இடையேயான வர்த்தக, பொருளாதார வளர்ச்சி மேம்படும்!

கடந்த 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, 16 ஆயிரம் கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு, 3,500 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில், இந்த உற்பத்தித் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அடுத்த மாதமே, சிலாநத்தத்தில் இருக்கும் சிப்காட் தொழிற்பேட்டையில், அடிக்கல் நாட்டு விழா நடந்தது. இன்றைக்குத் தொடக்க விழா நடைபெறுகிறது! 18 மாதத்தில், இந்த நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது. இதனால், தூத்துக்குடி மட்டுமல்ல, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்கள் மிகப்பெரிய தொழில் பகுதியாக வளர்ச்சியடையும். அதனால், உறுதியோடு சொல்கிறேன்; இந்நாள் தென் மாவட்டங்களின் ஒரு பொன்னாள். இதுதான், தமிழ்நாட்டின் 'Ease of doing Business'-க்கு அத்தாட்சி!

முதற்கட்டமாக, இதுவரை ஆயிரத்து 300 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு 50 ஆயிரம் மின் வாகன SUV உற்பத்தியாக இருக்கிறது. தெற்காசியாவிலேயே, வியட்நாமிற்கு வெளியில், இந்த நிறுவனம் தொடங்கியிருக்கும் முதல் மின்வாகன உற்பத்தித் திட்டம் இதுதான்! தமிழ்நாட்டில், அதுவும் நம்முடைய தூத்துக்குடியில் இருக்கும் இந்த ஆலைதான், இந்தியாவிலேயே முழு மின்சார பயணிகள் வாகன உற்பத்தித் திட்டம்! இதனால்,

இந்த வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர்கள், பெண்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

என்னுடைய கனவுத் திட்டமாக இருக்கக்கூடிய "நான் முதல்வன்" திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறப்புப் பயிற்சி பெற்று, இதே தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட டிப்ளமோ மாணவர்கள், இந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, கிட்டத்தட்ட 80 முதல் 90 விழுக்காடு பணியாளர்களை தூத்துக்குடி, அருகாமையில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் இருந்துதான் இந்த நிறுவனம் பணியமர்த்தப் போகிறார்கள். உலகளாவிய முதலீட்டில் உள்ளூருக்கான முழுமையான வளர்ச்சி என்கின்ற திராவிட மாடல் அரசின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது!

இந்தத் திட்டத்தால் தூத்துக்குடியைச் சுற்றியிருக்கும் மாவட்டங்களிலும், உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி வாய்ப்புகள் பெருகும். சென்னை, காஞ்சிபுரம், கோவை, ஓசூர் ஆகியவற்றைத் தொடர்ந்து, வளர்ந்து வரும் மோட்டார் வாகன தொழிற் கூடமாக தூத்துக்குடி உருவெடுத்து வருகிறது. இப்படித்தான் ஒவ்வொரு மண்டலமாக பார்த்துப் பார்த்து வளர்த்தெடுக்கிறோம்!

இந்தியாவின் இரண்டாவது முழு மின்வாகன உற்பத்தித் திட்டம் என்ற வகையில், கடந்த 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் TATA JLR நிறுவனத்தின் மின் வாகன உற்பத்திக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில், அடிக்கல் நாட்டினேன். இதன்மூலம், தமிழ்நாடுதான் 'மின் வாகனங்களின் தலைநகரம்' என்று உலகத்திற்கு நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

தற்போது, ஹுண்டாய், நிஸான், டாடா மோட்டார்ஸ், BMW, BYD, ஓலா, ஏர்தர், டிவிஎஸ், ஆம்பியர் போன்ற முன்னணி நிறுவனங்கள், தங்களின் மின் வாகன உற்பத்தியைத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் பல பாரம்பரிய கார் நிறுவனங்களும், மின்சார வாகனங்களின் பாதையைத் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு மின்சார வாகனங்களைக் கொண்டு வரும் இந்த சவாலான பயணத்தில், நீங்கள் எல்லோரும் எங்களுடன் இருக்கிறீர்கள் என்பதில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி.

இந்த மகிழ்ச்சியான நேரத்தில், வின் குழுமத்தினரான உங்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். உங்களின் வின் குழுமம் வாகனத் துறையில் மட்டுமல்லாமல், கல்வி, மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், நுகர்வோர் பொருட்கள் உள்ளிட்ட பல துறைகளில் கோலோச்சும் குழுமம். உங்களின் வருங்கால முதலீடுகளை எல்லாம், தமிழ்நாட்டிலேயே தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இந்த நேரத்தில் நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். வின்ஃபாஸ்ட் உற்பத்தித் திட்டம் தூத்துக்குடியில் நிறுவப்பட உறுதுணையாக இருந்த திராவிட மாடல் அரசு, உங்களின் அனைத்து முதலீட்டுத் திட்டங்களுக்கும் தேவையான உதவிகளை செய்து தர தயாராக இருக்கிறோம் என்று உறுதியளித்து, உங்கள் எல்லோருக்கும் மீண்டும் எனது நன்றிகளையும், வாழ்த்துகளையும் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

செப்டம்பர் 15: பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள்

பேரறிஞரின் பொன்மொழிகள்

நல்ல காலம்

★ இப்பொழுது தமிழிலே பாடுகின்ற, தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சியினராயினும், எம்மதத்தினராயினும், எக்கொள்கையினராயினும் செய்கிற தொண்டு தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பயன்படுகிறதென்றால், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது. உடனே கவிகளைக்கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிறான்; பாராட்டுகிறான்; பரிசளிக்கிறான். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக்காட்டு!

செம்மொழி

★ “தமிழ் மீது நாம் பற்று வைப்பது இயற்கை நியதியாகும். ஆனால், அதற்குமேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம்மொழி என்பது தெரிகிறது. அந்த மொழி மீது வைக்கப்படுகின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறவேண்டுமென்று விரும்புகிறோம். ஏற்றத்திற்குத் தடையாக, ஏதேனும் வருமானால், நம்மையும் அறியாமல் உள்ளம் கொதிப்படைகிறது.”

அந்தக் காலம் வரும்

★ “தமிழ்மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வதோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி இந்தத் தமிழ் மொழி உங்களுக்கு மட்டும் உரிய மொழி அல்ல. எங்களுக்கும் அதுதான் மொழி, அதுதான் இணைப்பு மொழி, அதுதான் ஆட்சிமொழி என்று கூறும் காலம் வரும்!

★ அந்தக் காலம் அவசர நடையால் வருவதல்ல! அவசரக் கோலத்தில் கிட்டுவதில்லை!

★ தூண்டில் போடுபவன் முள் அருகில் மீன் வரும் வரை எப்படிப் பொறுமையுடன், இருப்பானோ, அத்தகைய பொறுமையை நாம் கைக்கொள்ளவேண்டும், கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மறையிலும் தமிழ் நெறியிலும், காலம் – இடம் – வகை - பொருள் அறிந்து செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வழி நடந்து, தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்திடக் கூடிய நன்னாளை நாம் உருவாக்குவோம்.”

– அண்ணாவின் பொன்மொழிகள்

தூத்துக்குடியில் முதலீட்டாளர்கள் மாநாடு

ரூ.32,554 கோடி முதலீட்டில் 49,845 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 04.08.2025 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 32,554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 49,845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 1,230 கோடி ரூபாய் முதலீடு, 3,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 4 முடிவுற்ற திட்டங்களின் வணிக உற்பத்தியினைத் தொடங்கி வைத்து, மூன்று நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், 32,288.70 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில் 48,649 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 22 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட சில முக்கியமான திட்டங்கள் பற்றிய விவரங்கள்:

RGE நிறுவனம் - சிங்கப்பூரைச் சேர்ந்த செயற்கை இழை (Man Made Fibre) உற்பத்தியில், உலகளவில் முன்னணி நிறுவனமான RGE நிறுவனம், இந்தியாவிலேயே, முதன் முறையாக, தூத்துக்குடியில் உற்பத்தி ஆலை அமைத்திட முன்வந்துள்ளது. இத்திட்டத்தில், 4,953 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு, 1,065 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.



Kaynes Circuits India Private Limited நிறுவனம் - தமிழ்நாட்டில் 4,995 கோடி ரூபாய் முதலீட்டில், 74 Layer PCB, HDI PCB, Flexible PCB உற்பத்தி, உயர்செயல்திறன் laminates, Camera Module அசெம்பிளி, wire harness assembly போன்ற மேம்பட்ட மின்னணுவியல் உதிரிப்பாகங்கள் உற்பத்தித் திட்டத்தினை அமைக்கவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தூத்துக்குடி, பிற மாவட்டங்களில் 4,700 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மேலும், தூத்துக்குடி ஒரு எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மையமாக (Electronics Cluster) வளர்ச்சி பெறும்.

Yeemak Pvt. Ltd., & Jeanuvs நிறுவனங்கள் இணைந்து தூத்துக்குடி, பிற மாவட்டங்களில், multilayer PCB, artillery shells, radar systems, நுகர்வோர் மின்னணு உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யப்படவுள்ளன. இத்திட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட முதலீடு 3,400 கோடி ரூபாய், உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு 7,600 நபர்கள் ஆகும்.

சென்னை ராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனம் இந்திய இரயில்வேக்கு இரயில் பெட்டி உற்பத்திக்கான உதிரிப்பாகங்கள் மேற்கொள்ளும் முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனம், தூத்துக்குடியில், கப்பல் கட்டுமானத்திற்கான உதிரிப்பாகங்கள் தயாரிக்க 1,500 கோடி ரூபாய் உறுதிசெய்யப்பட்ட முதலீட்டில், ஒரு உற்பத்தி ஆலையை நிறுவிட முன்வந்துள்ளது.

சக்தி குழுமம் – வெடிபொருள், உந்துசக்தி உற்பத்தி, பரிசோதனை ஆலையை சக்தி குழுமம் தூத்துக்குடியில் அமைக்க முன்வந்துள்ளது. 5,000 கோடி ரூபாய் முதலீடு, 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். இவ்வாலை நிறுவப்படுவதன் மூலம், தூத்துக்குடி மாவட்டத்தில் பாதுகாப்புத் துறை சார்ந்த உற்பத்தி மேலும் வலுப்படும்.

Ethereal Exploration Guild – விண்வெளி தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் நிறுவனம், தூத்துக்குடியில் நடுத்தர வகை ராக்கெட் இன்ஜின்கள் உற்பத்தி, சோதனை செய்வதற்கான புதிய ஆலையை அமைக்கவுள்ளது. இதன்மூலம், விண்வெளித் துறையில் தூத்துக்குடி ஒரு முக்கிய மையமாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Hwaseung Enterprise – தென் கொரியாவைச் சேர்ந்த தோல் அல்லாத காலணி உற்பத்தியில் முன்னணி நிறுவனமான Hwaseung நிறுவனம், 1,720 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு, 20,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் ஒரு உற்பத்தி நிறுவனம் அமைக்க முன்வந்துள்ளது.

Mobius Energy நிறுவனம் 1,000 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட முதலீட்டில், தேனி மாவட்டத்தில் சோலார் செல்கள், மாட்யூல்கள் உற்பத்தி ஆலை நிறுவிட முன்வந்துள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், 265.15 கோடி ரூபாய் முதலீடு, 1,196 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	இடம்	உற்பத்தித் துறை
1	Seaora Marine Pvt. Ltd.,	தூத்துக்குடி	உணவுப் பதப்படுத்துதல்
2	Shrimathi Salt Pvt. Ltd.,	தூத்துக்குடி	உணவுப் பதப்படுத்துதல்
3	Ganesh Rajah Organization Pvt. Ltd.,	தூத்துக்குடி	உணவுப் பதப்படுத்துதல்
4	Kadalaiyur Match Company	தூத்துக்குடி	பொது உற்பத்தி
5	Surya Match Industries	தூத்துக்குடி	பொது உற்பத்தி
6	Antara Residency	தூத்துக்குடி	விருந்தோம்பல்
7	Everest Glass and Plywood Factory	இராமநாதபுரம்	பொது உற்பத்தி
8	La Palmera Resort	இராமநாதபுரம்	உணவுப் பதப்படுத்துதல்
9	VVM PUF Industries	திருநெல்வேலி	பொது உற்பத்தி
10	Deborah Technologies LLP	திருநெல்வேலி	இரசாயனம்
11	Muhil Modern Rice Mill	திருநெல்வேலி	உணவுப் பதப்படுத்துதல்
12	Sattur Venkateshwara Paper Mills Pvt. Ltd.,	திண்டுக்கல்	பொது உற்பத்தி
13	Shree Vinayaga Agro Manufacturing & Processing Industry	திண்டுக்கல்	உணவுப் பதப்படுத்துதல்
14	Horizon Beverages	திண்டுக்கல்	உணவுப் பதப்படுத்துதல்
15	Inbasekar Fly Ash Bricks	மதுரை	பொது உற்பத்தி
16	Rajarajeswari Krafts Private Limited	விருதுநகர்	பொது உற்பத்தி
17	MTC Polymers and Packaging	விருதுநகர்	பொது உற்பத்தி
18	Aathi Fishnet	கன்னியாகுமரி	பொது உற்பத்தி
19	Moringa Market Linkage Initiative	பல மாவட்டங்களில்	உணவுப் பதப்படுத்துதல்

திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டங்களின் விவரங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1,230 கோடி ரூபாய் முதலீடு, 3,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 4 திட்டங்களின் வணிக உற்பத்தியினைத் தொடங்கி வைத்தார். அதன் விவரங்கள்:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	இடம்	உற்பத்திப் பொருள்
1	Pro1 health	தூத்துக்குடி	தகவல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்பச் சேவைகள்
2	Nanda Devi Bio Energy	திருநெல்வேலி	இரசாயனம்
3	Britannia	திருநெல்வேலி	உணவுப் பதப்படுத்துதல்
4	YEEMAK	காஞ்சிபுரம்	மின்னணுவியல்

பணி நியமன ஆணைகள் வழங்கல்

TATA Power Solar, Infinx, Pinnacle Infotech ஆகிய மூன்று தொழில் நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கேற்க வேண்டுமென்று நாங்கள் விடுத்த அழைப்பை ஏற்று, இந்த மாநாட்டிற்கு வருகை தந்திருக்கக்கூடிய தொழில்துறைத் தலைவர்கள், முதலீட்டாளர்கள் அனைவரையும் அன்போடு வருக! வருக! வருக! என நான் வரவேற்கிறேன்!

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை முதன்மையாகக் கொண்டு நம்முடைய திராவிட மாடல் அரசு அதற்கான கட்டமைப்புகளை மிக சிறப்பான வகையில் உருவாக்கியிருக்கிறது. முதலீட்டாளர்கள் மாநாடுகளையும், முதலீட்டாளர்களுடனான சந்திப்புகளையும் தொடர்ச்சியாக நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். சென்னை, கோவை, தூத்துக்குடி, துபாய், ஜப்பான், அமெரிக்கா - அதுபோல ஸ்பெயின், அமெரிக்கா என்று பல இடங்களில் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி, தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்து இருக்கிறோம்.

2024-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயல்படுத்த, தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள் கடுமையாக உழைத்துக்கொண்டு இருக்கிறார். பல நாடுகளுக்குச் சென்று, வெளிநாட்டு முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து குவிக்கிறார். அதெல்லாம் தொழில் நிறுவனங்களாக உருவாகப் பாடுபடுகிறார்! தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறார். சொன்னதைச் செய்வோம் என்பதுதான் நம்முடைய அரசின் குறிக்கோள்! முதலமைச்சராக இருக்கக்கூடிய நான் என்னென்ன சொல்கின்றேனோ, அதையெல்லாம் தொழில்துறையில் செய்து கொண்டு வருகிறார் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

முத்து நகர், தூத்துக்குடியில் இரண்டாவது முறையாக இந்த நிகழ்வு நடைபெறுகிறது. துறைமுகமும், இயற்கை வளமும்

திறமையான மனிதவளமும் நிறைந்திருக்கும் இந்த மாவட்டத்தைத் தொழில்வளர்ச்சி மிக்க மாவட்டமாக வளர்த்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். தென் மாவட்டங்களில் அமைக்கப்படும் தொழிற் பூங்காக்களில், தொழிற்சாலைகளுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுகிறது. உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, எப்போது வேண்டும் என்றாலும் உடனே தொழில் துவங்கலாம் என்ற தயார் நிலையில், இந்தத் தொழிற் பூங்காக்கள் தயாராக இருக்கின்றன.

நீர்த் தேவையை நிறைவு செய்ய, கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலையும் அமைக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் டைடல் பார்க் அமைக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் நியோ டைடல் பார்க் தொடங்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், டாடா எரிசக்தி, விக்ரம் சோலார் எரிசக்தி ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விருதுநகரில் ஆயிரத்து 52 ஏக்கர் பரப்பளவில் PM மித்ரா பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. மொத்தத்தில், நம்முடைய தென் தமிழ்நாடு இதுவரை பார்க்காத தொழில் வளர்ச்சியைச் சாத்தியமாக்கி வருகிறோம்!

தென் தமிழ்நாடு பற்றித் தலைவர் கலைஞர் கண்ட கனவு இன்றைக்கு நிறைவேறிக்கொண்டு இருக்கிறது. அதனால்தான் வின்ஃபாஸ்ட் தொழிற்சாலையின் தொடக்க விழாவில் நான் சொன்னேன் – இந்நாள் தென் மாவட்ட வளர்ச்சியில் ஒரு மிகப் பெரிய பொன்னாளாக அமைந்திருக்கிறது. ஆட்சிக்கு வந்த உடனே, தமிழ்நாட்டை 2030-ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும் என்று டார்கெட் செட் செய்தோம்! அதை அடைய, பெருமளவில் முதலீடுகளை மேற்கொள்ளக் கூடிய உயர் தொழில்நுட்ப

முதலீடுகளை ஈர்ப்பது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலைவாய்ப்புகளை அளிக்கும் முதலீடுகளையும் ஈர்க்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

உயர் தொழில்நுட்பம் சார்ந்த செமிகண்டக்டர் உற்பத்தி, மின்வாகனங்கள் உற்பத்தி, சோலார் செல்கள், பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, தகவல் தரவு மையங்கள் போன்ற அனைத்துத் துறைகளிலும் முன்னேறுவதற்கு அதில் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அதிக அளவிலான உயர் ஊதிய வேலைவாய்ப்புகள் கொண்ட இந்தத் துறைகள் மூலமாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், உற்பத்திச் சூழலையும் மேம்படுத்த முடியும். அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கும் தொழிற்சாலைகளை வளர்ச்சி குறைந்த மாவட்டங்களில் அமைப்பதால், அந்த வட்டாரத்து மக்களின் தனிநபர் வருமானம் அதிகரிக்கும்!

அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்டங்களுக்குமான வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்ற பரந்த நோக்கத்தோடு இந்த ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறோம். தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து வரக்கூடிய கப்பல்களுக்கு இந்தியாவின் நுழைவு வாயிலாகத் தூத்துக்குடி துறைமுகம் இருக்கிறது. அதனால்தான் முதலீடுகளும் தூத்துக்குடியை நோக்கி இன்றைக்கு அணிவகுத்து வந்து கொண்டிருக்கிறது.

தூத்துக்குடி பகுதியைப் "புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையமாக" உருவாக்கும் வகையில், பல்வேறு பசுமை ஹைட்ரஜன், சோலார் செல் உள்ளிட்ட உற்பத்தித் திட்டங்களை, தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதிகளில் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது கூட வின்ஃபாஸ்ட் உற்பத்தியைத் தொடங்கி வைத்துவிட்டுதான், இந்த மாநாட்டிற்கு வந்து கலந்து கொண்டிருக்கிறேன். இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில், தூத்துக்குடி, நெல்லையின் வளர்ச்சிக்காக 4 சிறப்பு அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

முதல் அறிவிப்பு – தூத்துக்குடி மாவட்டத்தில் 250 ஏக்கர் பரப்பளவில், ஒரு விண்வெளிப் பூங்கா - ஸ்பேஸ் பார்க் அமைக்கப்படும். இந்தப் பூங்கா, விண்வெளித் துறைக்குத் தேவையான கருவிகளின் உற்பத்தி, தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

இரண்டாவது அறிவிப்பு – கப்பல் கட்டுமானத் துறையை மேம்படுத்த நாம் மேற்கொண்டு வரும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, இதற்காக ஒரு பிரத்தியேக நிறுவனம் வெகுவிரைவில் தொடங்கப்படும். அந்த நிறுவனம் மூலம், கப்பல் துறைத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

மூன்றாவது அறிவிப்பு – முருங்கை ஏற்றுமதி, சாகுபடி கூட்டமைப்பிற்காக, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் 5 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவினத்தில் ஒரு பொது வசதி மையம் நிறுவப்படும்.

நான்காவது அறிவிப்பு – திருநெல்வேலி மாவட்டத்தில், தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல், வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் மண்டலப் பிரிவு அமைக்கப்படும்.

நாங்கள் எடுத்து வரும் பெரு முயற்சிகளின் பலனாக, கடந்த நான்கு ஆண்டுகளில், 10 இலட்சத்து 30 ஆயிரத்து 348 கோடி ரூபாய் அளவிற்கு, உறுதி செய்யப்பட்ட முதலீடு, 32 இலட்சத்து 28 ஆயிரத்து 945 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில் 898 திட்டங்களை ஈர்த்திருக்கிறோம்.

இன்றைக்குத் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், 32 ஆயிரத்து 554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 49 ஆயிரத்து 845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில், 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இது தவிர MSME துறை சார்பில், 244 கோடியே 45 இலட்சம் ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு, ஆயிரத்து 56 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 19 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, 2 ஆயிரத்து 530 கோடி ரூபாய் முதலீடு, 3 ஆயிரத்து 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 5 திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், டாட்டா பவர் சோலார், இன்ஃபினிக்ஸ் மற்றும் பினக்கிள் இன்ஃபோ-டெக் ஆகிய 3 நிறுவனங்களைச் சேர்ந்த பல்வேறு நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளையும் இங்கே நான் வழங்கியிருக்கிறேன்.

இன்றைக்குக் கையெழுத்தாகி இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மின்னணுவியல், பாதுகாப்பு, கப்பல் கட்டுமானம், தோல் அல்லாத காலணிகள் போன்ற பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

வின்ஃபாஸ்ட் திட்டம் மூலமாக, மின் வாகனத் துறைக்கான மையமாகத் தூத்துக்குடி உருவெடுத்து வரும் அதே நேரத்தில், மின்னணுவியல் துறைக்கான மையமாகவும் தூத்துக்குடி மாறப் போவது உறுதி.

நம்முடைய திராவிட மாடல் அரசு மீது மக்கள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை, தொழில் தொடங்கும் உங்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் நாங்கள் தொடர்ந்து நிச்சயமாக வழங்குவோம். நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற மாதிரி, நம்முடைய இளைஞர்களின் திறனை மேம்படுத்த அனைத்து முயற்சிகளுக்கும் நாங்கள் ஊக்கமளித்துப் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

“எந்த விதமான தொழிற்சாலை அமைத்தாலும், அதற்கான திறன்கொண்ட பணியாளர்கள் இங்கு இருக்கிறார்கள்” என்று தொழிலதிபர்கள் என்னிடம் அடிக்கடி சொல்கிறார்கள். உங்களுக்குத் தேவையான அனைத்தும் தமிழ்நாட்டில் இருக்கிறது! உங்களின் முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வாருங்கள் என்று அன்போடு அழைக்கிறேன்.

கடின உழைப்பால் இந்த வளர்ச்சியை, வெற்றியை நாம் ஈட்டியிருக்கிறோம். இது நீடிக்க வேண்டும், மேலும் பெருக வேண்டும். தம்பி டி.ஆர்.பி. ராஜா இந்த மாநாட்டிற்கு “Rising” என்று பெயர் வைத்துள்ளார். பொருத்தமான பெயர்தான். என்னைப் பொறுத்தவரையில், “Tamil Nadu Rising” மட்டுமல்ல, திராவிட மாடல் ஆட்சியில் “Tamil Nadu will keep on Rising” என்று சொல்லி, உங்கள் எல்லோருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

“சென்னை இதழியல் கல்வி நிறுவனம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.08.2025 அன்று சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக்கழகம் எதிரில் அமைந்துள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் 2025-2026 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், இதழியல் துறையில் பயிற்சி, ஆராய்ச்சி, ஊடகக் கல்வி மேம்பாட்டுக்கு ஒரு முதன்மையான கல்வி நிறுவனத்தை நிறுவி, அதன்மூலம் ஆர்வம் மிகுந்த இளம் திறமையாளர்களை ஊக்குவிக்கவும், இதழியல், ஊடக ஆய்வியலில் தரமானக் கல்வியை வழங்கிடும் வகையில், இதழியல், ஊடகவியல் கல்வி நிறுவனம் (Institute of Journalism and Media Studies) இக்கல்வியாண்டு முதல் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இதழியல் துறையில் ஆர்வமுள்ள இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் நோக்குடனும், தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, ஊடகக் கல்வியை வழங்குவதற்காகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைய தலைமுறையினருக்குக் குறைந்த கட்டணத்தில், ஓர் ஆண்டு இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பை (Post Graduate Diploma in Journalism) வழங்குவதற்காகவும் சென்னை, கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகில் தமிழ்நாடு அரசு சார்பில் “சென்னை இதழியல் கல்வி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்

சென்னை இதழியல் கல்வி நிறுவனத்திற்காக 7.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பு (Post Graduate Diploma in Journalism) இந்தக் கல்வியாண்டு முதல் (2025 - 2026) தொடங்கப்படுகிறது. இங்குத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்றுவிக்கப்படுகிறது.

இந்நிறுவனத்தில் அச்சு, தொலைக்காட்சி, வானொலி, இணைய ஊடகங்களில் பணிபுரிவதற்கானத் திறமையை வளர்த்துக்கொள்ளும் வகையில் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேசக் கல்வி நிறுவனங்களுடன் இந்நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொள்ள உள்ளது. இந்த அனுபவம், நொடிக்கு நொடி மாறிவரும் தொழில்நுட்ப யுகத்தில் அடுத்த தலைமுறையினர் தங்களைத் தயார் செய்துகொள்ள உதவும்.

இதழியல் கல்வியைச் சிறப்பாக வழங்கவுள்ள, சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தைக் கோட்டூர்புரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, பார்வையிட்டார். தொடர்ந்து, இக்கல்வி நிறுவனத்தில் இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பில் முதலாமாண்டு சேர்க்கை பெற்ற மாணவ, மாணவியர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ரூ.5.10 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட படப்பிடிப்புத் தளம்

படமும்/ செய்தியும்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.08.2025 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம், மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் 5.10 கோடி ரூபாய் செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு. நா.முருகானந்தம். இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் திரு. டிராட்ஸ்கி மருது, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் (பொறுப்பு) திரு. மு.மேகவர்ணம், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையில் ரூ.37 கோடி மதிப்பீட்டில் 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் "மினி டைடல் பூங்கா"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.08.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்குக் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்து, அதனை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாகப் பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்படுவதாக, ஒன்றிய அரசின் 2024-2025 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2000-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.

அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி' என்பதை முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தகவல் தொழில்நுட்பச் சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 இலட்சம் சதுரடி கட்டுமானப் பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 இலட்சம் சதுர அடி கட்டுமானப் பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன. மேலும்,

5.57 இலட்சம் சதுர அடி கட்டுமானப் பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை மேலும் விரிவுபடுத்தும் வகையில், ஓசூரில் ரூ.400 கோடி செலவில் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6,000 தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இவை மட்டுமின்றி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமானப் பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, விழுப்புரம், திருப்பூர் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 24.06.2022 அன்றும், வேலூர் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 18.02.2023 அன்றும், தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 19.05.2023 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர், சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டன. திருப்பூர், வேலூர், காரைக்குடி மினி டைடல் பூங்காக்களின் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவை விரைவில் செயல்படத் துவங்கும். மேலும், நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான வடிவமைப்புப் பணிகள் முடிவுற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் அப்பகுதிகளில் வசித்துவரும் பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அவர்கள் வசித்துவரும் மாவட்டங்களிலேயே தங்கி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுடன், அப்பகுதிகள் சமூகப் பொருளாதார வளர்ச்சியடையவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

மக்கள் போற்றிய மகத்தானத் திட்டங்கள்

அன்று...

"கலைஞர் காப்பீட்டுத் திட்டம்"

ஏழைகளுக்கு உதவிட, ஏழைகளின் இன்னல் நீக்கி அவர்கள் முகத்தில் சிரிப்பைக் கண்டிடவும், மருத்துவச் செலவு என்பது குடும்பங்கள் ஏழ்மையில் இருப்பதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாக இருப்பதால் ஏழைக்குடும்பங்கள் மேலும் வறுமையடைவதிலிருந்து காப்பாற்றிடும் வகையிலும், ஏழைக் குடும்பங்கள் தங்கள் கைகளிலிருந்து செலவு செய்வதைக் குறைத்து அவர்களுக்குத் தரமான மருத்துவ சேவைகளை வழங்கும் விதமாகவும், கோடிக்கணக்கான மக்கள் வாழ்வதற்கும், நோயிலிருந்து பிழைப்பதற்கும், உயிர்காக்கின்ற உயர் சிகிச்சையைப் பெறும் புதிய திட்டமான **"கலைஞர் காப்பீட்டுத் திட்டம்"** சென்னையில் 23.07.2009 அன்று **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

"நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்"

சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையிலும் 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு, உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மனநலப் பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், சமூகப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு உயர் மருத்துவ சேவை வழங்கும் **"நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின்"** சிறப்பு மருத்துவ முகாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களால் சென்னை சாந்தோம் , செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 02.08.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இன்று...

சென்னையில்

ரூ.233 கோடி மதிப்பில் 55 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள், 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.08.2025 அன்று போக்குவரத்துத் துறையின் சார்பில், சென்னை பெரும்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 49.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்து வைத்தார். தொடர்ந்து சென்னையின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் வகையில், இரண்டாம் கட்டமாக 233 கோடி ரூபாய் மதிப்பிலான பயணிகளின் தேவைக்காக உயரத்தைக் குறைக்கும் வசதி கொண்ட 55 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள், 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

சென்னைப் பெருநகரக் கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ், நிலையான நகர்ப்புரச் சேவைகள் திட்டத்தின் அடிப்படையில் (CCP-SUSP), உலக வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) பங்களிப்புடன், சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், 625 தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. வியாசர்பாடி, பெரும்பாக்கம், பூவிருந்தவல்லி, மத்திய பணிமனை, தண்டையார்பேட்டை-1 உள்ளிட்ட

> மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்.

ஐந்து பணிமனைகள் மூலம் 697 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மொத்த விலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாழ்தள மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 30.06.2025 அன்று முதற்கட்டமாக வியாசர்பாடி மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்து வைத்து, 120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

இரண்டாம் கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 49.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்துவைத்து, 233 கோடி ரூபாய் மதிப்பிலான 55 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்து, 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் என மொத்தம் 135 பேருந்துகளின் இயக்கத்தைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

மீதமுள்ள பூவிருந்தவல்லி, மத்திய பணிமனை, தண்டையார்பேட்டை-1 ஆகிய மூன்று பணிமனைகளிலும், உரிய கட்டட உட்கட்டமைப்பு (Civil Infrastructure), மின்னேற்றம் (Charger) செய்வதற்குரிய கட்டுமானப் பணிகள், புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்குவதற்குத் தேவையான பராமரிப்புக் கூடம், அலுவலக நிருவாகக் கட்டடம், பணியாளர்கள் ஓய்வறை ஆகியவை புதுப்பிக்கப்பட்டு, புதிய மின்மாற்றிகள் பொருத்துதல், தீயணைக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் நிறுவுதல் உள்ளிட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய தாழ்தள மின்சாரக் குளிர்சாதனப் பேருந்துகள், புதிய தாழ்தளப் பேருந்துகளில் உள்ள சிறப்பு அம்சங்கள்:

உலகின் முக்கியமான நகரமாக உருவாகி வரும் சென்னையில் பொதுமக்கள் அனைவரும் பொதுப்போக்குவரத்து வாகனங்களைப் பயன்படுத்திப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், 55 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள், குளிர்சாதனப் பேருந்துகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

தரையில் இருந்து 40 செ.மீட்டர் (400 மி.மீ) உயரம் கொண்ட தாழ்தள மின்சாரப் பேருந்தின் உயரத்தை, தேவையான நேரத்தில் பேருந்து ஓட்டுநர் 25 செ.மீட்டர் (250 மி.மீ) உயரம் வரை குறைத்து மாற்றுத்திறனாளிகள், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் பேருந்துகளில் எளிதாக ஏறி, இறங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

பயணிகள் எளிதாக அமரும் வகையில் இருக்கைகள் ஒரே சமதளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தாழ்தள மின்சாரப் பேருந்துகளில் இருக்கைகளின் பக்கவாட்டு இடைவெளி 65 செ.மீட்டருக்கு (650 மி.மீ.) பதிலாக 70 செ.மீட்டர் (700 மி.மீ) அகலம் உள்ளதால், நின்று செல்லும் பயணிகளுக்கு வசதியாக இருக்கும்.

மேலும், மகளிருக்குப் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்திடும் வகையில், தாழ்தள மின்சாரப் பேருந்துகளில், கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகளில் விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திர பயணச் சீட்டு ரூ.2,000/- அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து முனையத்திலிருந்து (KCBT) – திருவான்மியூர் செல்லும் 95X வழித்தடத்தில் 10 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து (KCBT) – சோழிங்கநல்லூர் செல்லும் 555S வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், தியாகராய நகரிலிருந்து – திருப்போரூர் செல்லும் 19 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், பிராட்வேயிலிருந்து மெரினா கடற்கரை வழியாக – கேளம்பாக்கம் செல்லும் 102 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், சென்னை விமான நிலையத்திலிருந்து – சிறுசேரி ஐ.டி.பூங்கா செல்லும் MAA2 வழித்தடத்தில் 15 ஏ.சி பேருந்துகள், எம்.ஜி.ஆர்.கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து கேளம்பாக்கம்/ சிறுசேரி ஐ.டி.பூங்கா செல்லும் 570 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 20 ஏ.சி பேருந்துகள் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

மேலும், திருவான்மியூரிலிருந்து – சிறுசேரி ஐ.டி.பூங்கா செல்லும் 102E வழித்தடத்தில் 5 டீலக்ஸ் பேருந்துகள், அடையாறு பேருந்து நிலையத்திலிருந்து – தாம்பரம் செல்லும் 99 வழித்தடத்தில் 5 டீலக்ஸ் பேருந்துகள், பிராட்வேயிலிருந்து – பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புக்குச் செல்லும் 102P வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள், தியாகராய நகரிலிருந்து பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புக்குச் செல்லும் 19AX வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள், தாம்பரம் மேற்கு முதல் – சோழிங்கநல்லூர் செல்லும் 99A வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள், கிண்டி திரு.வி.க. எஸ்டேட்டிலிருந்து பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புக்குச் செல்லும் 119G வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள் என மொத்தம் 80 டீலக்ஸ் பேருந்துகள், 55 குளிர்சாதனப் பேருந்துகள் என மொத்தம் 135 பேருந்துகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழியனுப்பி வைத்தார்.

தமிழ்நாடு வேகமாக நகரமயமாகி வருவதால் போக்குவரத்தில் பசுமை இல்லா வாயு உமிழ்வு அதிகளவு வெளியேறுகிறது. பொதுப் போக்குவரத்தை மின்மயமாக்குவதன் மூலம் பசுமை இல்லா வாயு உமிழ்வை அதிகரிப்பதைத் தடுப்பதுடன், சமன் செய்யவும் முடியும். ஒவ்வொரு டீசல் பேருந்தும் ஒரு கிலோ மீட்டருக்கு தோராயமாக 755 கிராம் கார்பன் டை ஆக்சைடை (CO_2) வெளியிடுகிறது. புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலம் கார்பன் உமிழ்வைக் குறைத்து, காற்றின் தரத்தைக் கணிசமாக மேம்படுத்தும்.

தெரிந்துகொள்வோம்

ஆவின் பால் உப பொருட்கள் விற்பனையில் புதிய உச்சம்...

- சென்னை முழுவதும் நாளொன்றுக்கு சுமார் 15 இலட்சம் லிட்டர் பால், மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.30 கோடி மதிப்பிலான பால் உப பொருட்கள், 35 ஆவின் ஜங்சன் பாலகங்கள், 200 ஆவின் பாலகங்கள், சுமார் 860 சில்லரை விற்பனையாளர்கள் மூலமாகப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுமக்கள், குழந்தைகளைக் கவரும் வகையில் சென்னை மாநகரிலுள்ள 21 ஆவின் ஜங்சன் பாலகங்கள் புனரமைக்கத் திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக 12 பாலகங்களில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் பால் உப பொருட்கள் விற்பனையை அதிகரிக்க பல்வேறு விற்பனை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் சென்னையில் பால் உப பொருட்கள் விற்பனை கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு ஜூலை மாதம் சுமார் 30% அதிகரித்துள்ளது.
- மே 2025-இல் ரூ.29 கோடி, ஜூன் 2025-இல் ரூ.30.30 கோடி, ஜூலை 2025-இல் ரூ.32.35 கோடி மதிப்பிலான பால் உப பொருட்கள் விற்பனை நடைபெற்றுள்ளது. இவ்விற்பனையானது கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் புதிய உச்சத்தை அடைந்துள்ளது.
- மேலும் 2025-2026ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தொடரில் பால்வளத்துறை மானியக் கோரிக்கையில் பால், பால் உப பொருட்கள் விற்பனையை அதிகரிக்க ரூபாய் 210 இலட்சம் மதிப்பீட்டில் 600 குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க முதற்கட்டமாக 60 எண்ணிக்கையிலான உறைகலன்கள் கொள்முதல் செய்து 21.05.2025 அன்று வழங்கப்பட்டது.
- அதனைத் தொடர்ந்து 05.08.2025 அன்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோதங்கராஜ் அவர்கள், சென்னை நந்தனம் ஆவின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதியதாக 5 நபர்களுக்கு ஆவின் பால் மொத்த விற்பனையாளர்களுக்கான நியமன ஆணைகளையும், 5 நபர்களுக்கு ஆவின் பாலகங்களுக்கான நியமன ஆணைகளையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஒரு நபருக்குத் தட்டச்சர் நியமன ஆணையும், ஒரு நபருக்கு பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தையும், பால் உப பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, இரண்டாம் கட்டமாகக் கொள்முதல் செய்யப்பட்ட 60 எண்ணிக்கையிலான உறைகலன்களை ஆவின் முகவர்களுக்கும் வழங்கினார்.

மாணவ, மாணவியர்களுக்கான

சிறப்புப் பயண நடை பேருந்துகள்...

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.08.2025 அன்று திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் போக்குவரத்துத் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவிகளுக்கு 2025-2026 ஆம் கல்வியாண்டுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகளை வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் முதற்கட்டமாக 25 பள்ளி வளாகங்களிலிருந்து மாணவ, மாணவிகளுக்காக இயக்கப்படும் 50 சிறப்புப் பயண நடை பேருந்துகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்து, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

தமிழ்நாடு முழுவதும் 35,12,147 மாணவ, மாணவிகள் பயணம் மேற்கொள்ள 2025-2026 கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட உள்ளன. இதில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுமார் 4,10,000 மாணவ, மாணவிகளுக்குப் பயண அட்டைகள் வழங்கப்பட உள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இந்த ஆண்டுக்கான

மாண்புமிகு
தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகளை வழங்குவதைத் தொடங்கி வைக்கும் வகையில், மாணவிகளுக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகளை வழங்கினார்.

சென்னை மாநகரில் பயிலும் மாணவ, மாணவிகள் அவர்களது தினசரி பேருந்துப் பயணத்தின்போது மிகுதியான கூட்டம், பொதுமக்களுடன் நெரிசலில் நின்று கொண்டு பயணிப்பது போன்ற சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதைத் தவிர்க்கவும், மாணவர்களுக்குப் பாதுகாப்பான, வசதியான பேருந்து சேவையை வழங்கவும் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பள்ளிகளுக்கு, 50 பயண நடைகளாகச் “சிறப்பு மாணவர் பேருந்துகளைக்” காலை பேருந்து முனையத்திலிருந்து இயக்கி, வழித்தடங்களில் பள்ளி மாணவர்களை மட்டும் ஏற்றி, பள்ளி வளாகத்தின் உள்ளே சென்று இறக்கிவிடப்படுவர். மேலும் மாலை நேரங்களில் பள்ளி வளாகத்தின் உள்ளிருந்து மாணவர்களை ஏற்றிக் கொண்டு, உரிய வழித்தடத்தில் இயக்கப்படும். இதனால் மாணவர்கள் பாதுகாப்பாகவும், நெரிசலின்றியும் பயணிக்க இயலும். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலிருந்து பள்ளி மாணவர்களுக்கு என இயக்கப்படும் சிறப்புப் பேருந்துகளைக் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.

இந்தியாவிலேயே அதிக அலைச்சறுக்கு சாம்பியன்களை உருவாக்கிய தமிழ்நாடு

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதக்கங்களை வழங்கி ஆற்றிய உரை.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாமல்லபுரத்தில் 03.08.2025 முதல் 12.08.2025 வரை தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட 4ஆவது ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 12.08.2025 அன்று பதக்கங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

அனைவருக்கும் இனிய மாலை வணக்கம். ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன் போட்டியின் நிறைவு விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், இந்தியாவில் விளையாட்டு மேம்பாட்டில் தமிழ்நாடு எப்போதும் முன்னணி மாநிலமாகத் திகழ்கின்றது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் 2025 போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நாங்கள் நடத்தியுள்ளோம். இந்தப் போட்டியின் முடிவுகளில் எங்கள் முயற்சிகளுக்கு நேர்மறையான நல்ல விளைவுகள் கிடைத்துள்ளதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த நான்கு ஆண்டுகளில், அலைச்சறுக்கு விளையாட்டினை ஊக்குவிக்க நமது தமிழ்நாடு அரசு 6 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதி உதவியை

வழங்கியுள்ளது. இதன் மூலம், உலக சர்ஃபிங் லீக் QS 3000, ஆசிய சர்ஃபிங் சாம்பியன்ஷிப் 2025 போன்ற பல சிறப்பு வாய்ந்த அலைச்சறுக்குப் போட்டிகளை நாங்கள் நடத்தியுள்ளோம்.

இன்று, இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அலைச்சறுக்கு சாம்பியன்களை உருவாக்கியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஆண்டு சாம்பியன்ஷிப் போட்டியை நடத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நமது தமிழ்நாடு அரசு 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்திய அலைச்சறுக்கு வரலாற்றில் முதல் முறையாக, இந்திய அலைச்சறுக்கு வீரர் ரமேஷ் புதிஹால் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்றுள்ளார். இந்தச் சாதனை நமது தமிழ்நாட்டின் கடற்கரையில் நடந்ததில் நாங்கள் பெருமையடைகின்றோம். ஆண்கள் ஓபன் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ரமேஷ் புதிஹாலுக்கு நாம் அனைவரும் நமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வோம்.

இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் சில அசாதாரண முடிவுகளை நாங்கள் கண்டோம். ஆண்கள் ஓபன் அணி தரவரிசையில் இந்தோனேசியா, தென் கொரியாவுக்கு அடுத்ததாக இந்தியா ஒட்டுமொத்தமாக 3ஆவது இடத்தைப் பிடித்தது.

கோவளத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டின் வீரர் கிஷோர் அரையிறுதிக்கு முன்னேறி யாரும் நினைத்துப் பார்க்க இயலாத சாதனையைப் படைத்துள்ளார். அதே நேரத்தில் கோவளத்தைச் சேர்ந்த ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறினார்.

18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில், கோவளத்தைச் சேர்ந்த 13 வயது ஹரிஷ் காலிறுதிக்கு முன்னேறி, அவரது வயதினருக்கு மீறிய சாதனையைப் படைத்துள்ளார்.

இந்தியாவின் சாதனைகளைத் தாண்டி ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டியில் பல்வேறு ஆசிய வீரர்களின் உலகத்தரம் வாய்ந்த திறமைகளைக் காணமுடிந்தது. 17 வயதே நிரம்பிய கொரியாவின் கன்னாவ் ஹீஜெய், ஆண்கள் ஓபன், 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் பதக்கம் வென்று இரட்டை மகுடம் சூடியுள்ளார். மகளிர் ஓபன் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற ஜப்பானைச் சேர்ந்த அன்ரி மட்ஸுனோ-வுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

19 நாடுகளைச் சேர்ந்த 112 அலைச்சறுக்கு வீரர்கள், 25 நடுவர்கள் உட்பட 60 அலுவலர்கள் பங்கேற்புடன் இந்த ஆண்டிற்கான போட்டிகள் சிறப்பாக முடிந்துள்ளது. அதிகளவிலான வீரர்களின் பங்கேற்பும், அவர்கள் வெளிப்படுத்திய உற்சாகமூட்டும் அலைச்சறுக்குச் செயல்பாடுகளும் தமிழ்நாட்டில் சர்ஃபிங் விளையாட்டை மேம்படுத்தும் எங்கள் முயற்சி சரியான பாதையில் செல்கிறது என்ற நம்பிக்கையை வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் நடைபெறும் இந்தப் போட்டியில் போட்டியிடுவதற்காகத் தொலைதூரத்திலிருந்து பயணம் செய்து வந்துள்ள அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் இயற்கை அழகையும், மக்களின் அரவணைப்பு, விருந்தோம்பலையும் நீங்கள் ரசித்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு நாங்கள் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதிபூண்டுள்ளோம் என்பதை உங்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த சாம்பியன்ஷிப் போட்டியை ஒரு மகத்தான வெற்றியாக மாற்றியமைத்த அனைத்து அலைச்சறுக்கு வீரர்கள் ஏற்பாட்டாளர்கள், அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டின் இனிய நினைவுகளுடன் நீங்கள் நாடு திரும்புவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்கள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செப்டம்பர் 5: கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பிறந்த நாள்

“தியாக வாழ்வு”



ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிராகக் கப்பலோட்டி, சிறையில் வாடிய ‘கப்பலோட்டிய தமிழர்’ வ.உ.சிதம்பரனார் அவர்களது புகழ் வாழ்க!

நாட்டுத் தொண்டும் - மொழித் தொண்டும் தனது இரு கண்கள் என வாழ்ந்திட்ட அந்தப் பெருமகனாரின் தியாக வாழ்வை, இளைஞர்களுக்குப் பயிற்றுவித்து அவரது பெருமையைப் போற்றுவோம்!

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்
சமூக வலைதளப்பதிவு - 05.09.2024

கிராமப்புறங்களில் சிறுவணிகர்கள் வணிக உரிமம் பெறும் நடைமுறையினை எளிமைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய குழு அமைப்பு...

- கிராமப்புற ஊராட்சிப் பகுதிகளில் வணிகம்/ தொழில் புரிய பல்வேறு உரிமங்கள், "அபாயகரமானதும், தீங்கு விளைவிக்கும் வர்த்தக உரிமமும்" என்று பழைய அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தன. அதுபோல, ஒவ்வொரு ஆண்டும் இந்த உரிமமும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறையும் இருந்து வருகிறது. இன்றளவிலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பல்வேறு வகையான நிறுவனங்கள் தொழில் / வர்த்தக உரிமம் பெற்றுச் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஊராட்சிகளுக்கு வரி வருமானம் கிடைத்து வருகிறது.

- தொழில் உரிமம் பெறுவதற்கான சட்டப்பிரிவு பல ஆண்டுகளாக இருந்த போதும் முறையான விதிகள் (Rules) இல்லாததால் ஒவ்வொரு கிராம ஊராட்சிகளிலும் தங்களது தீர்மானத்தின் அடிப்படையில் பல்வேறு விதமான கட்டணங்கள் நிர்ணயம் செய்து அதிக அளவில் கட்டணங்களை வசூலித்து வந்தன. இக்குறைகளை நீக்கும்பொருட்டுப் பல்வேறு வணிகர்களின் கோரிக்கைகளை ஏற்று இப்போது புதியதாக விதிகள் உருவாக்கப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

- மேலும், ஆறாவது மாநில நிதிக்குழு, "அபாயகரமானதும், தீங்கு விளைவிக்கும் வர்த்தக உரிமமும்" என வழங்கப்பட்டிருந்த பெயரை, "வணிக உரிமம்" என எளிமைப்படுத்தி மாற்றி வழங்க பரிந்துரை செய்துள்ளது. அதன்படி தற்போது வகுக்கப்பட்டுள்ள விதிகளில், "அபாயகரமானதும், தீங்கு விளைவிக்கும் வர்த்தக உரிமமும்" என்ற பெயரை, "வணிகம் அல்லது தொழில் உரிம விதிகள்" என மாற்றிச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு 04.03.2024 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வணிகம் அல்லது தொழில் உரிமம் பெறுவதற்கான நடைமுறை விதிகள் உருவாக்கப்பட்டு, 09.07.2025 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

- இப்புதிய நடைமுறையின்படி, "ஆன்லைனில் வணிக உரிமம் பெறும் நடைமுறை" கொண்டு வரவும், முந்தைய சட்டப் பிரிவின்படி ஒவ்வொரு ஆண்டும் தொழில் உரிமம் புதுப்பிக்க வேண்டிய கட்டாயம் இருந்த நிலையில், தற்போது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தால் போதுமானது என்ற சலுகை" "நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளைவிட குறைந்த தொழில் உரிமக் கட்டணம் நிர்ணயம்" "வணிக உரிமம் பெறும் விண்ணப்பம் மீது 30 நாட்களுக்குள் முடிவு எடுக்காவிட்டால் உரிமம் வழங்கப்பட்டதாகக் கருதப்படும் (Deemed Approval) என்ற சலுகை" "விண்ணப்பங்களை முறையான விசாரணை - உரிய வாய்ப்பு அளிக்காமல் நிராகரிக்கக்கூடாது என்ற நிபந்தனை" என்ற பல்வேறு நன்மைகள் இந்தப் புதிய விதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

- இந்நிலையில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புச் சார்பாக உரிமம் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவது குறித்துக் கோரிக்கை மனு ஒன்றினை 30.07.2025 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளனர். இந்தக் கோரிக்கை மனுவிலுள்ள விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காகத் துறை அலுவலர்கள், வணிகர் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றினை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்தக்குழு, கிராமப்புறங்களில் சிறு வணிகர்கள் வணிக உரிமம் பெறுவது குறித்த நடைமுறையினை எளிமைப்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டு அரசுக்குப் பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும். ■

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

பயிற்சி வினா - விடைத்தாள்

1. இரண்டாம் பானிபட் போருக்கு முன்பு டெல்லியில் --------- எனும் மன்னர் 'ராஜா விக்ரம்ஜித்' என்ற பட்டத்தை ஏற்றுக் கொண்டார்.

(A) பைராம் கான் (B) சலீம் கான்

(C) ஹேமு (D) கியா கான்

2. ------- அக்பரின் தீன் இலாஹியை ஏற்றுக் கொண்டார்

(A) பீர்பால் (B) மான்சிங்

(C) தோடர்மால் (D) தான்சென்

3. ஈஸ்வர் சந்திர குப்தாவின் குறிப்பிடத்தக்க பத்திரிகை -------- பல புகழ்பெற்ற எழுத்தாளர்களின் பயிற்சிக்களமாக இருந்தது.

(A) நீல் தர்பன் (B) அமிர்தா பாஜாரிக்கா

(C) சம்வாத் பிரபாகர் (D) கைலாசம்

4. பி.சி. பாலின் கருத்தின்படி ------- இந்தியக் கலாச்சார மறுமலர்ச்சியின் தீர்க்கதரிசியாவார்.

(A) பங்கிம்சந்திரா (B) அரவிந்தகோஸ்

(C) ஹேம் சந்திர பானர்ஜி (D) நவீன் சந்திர சென்

5. "ஆராய்ந்து பார்த்தால், அக்பரை இந்திய தேசியத்தின் தந்தையாகக் கருத வேண்டும். அவருடைய காலத்தில் தேசப்பற்று குறைவாகவும், மதம் நாட்டைப் பிளவுபடுத்தும் சக்தியாகவும் இருந்தது. அக்பர் மதப் பிரிவினைவாதங்களைக் களைந்து, அந்த இடத்தில் இந்தியத் தேசியம் என்ற முன்னோடியான பொது மனப்பான்மையை முன்வைத்தார்" என்று கூறியவர் யார்?

(A) ஜவஹர்லால் நேரு (B) மோதிலால் நேரு

(C) மகாத்மா காந்தி (D) சுபாஷ் சந்திர போஸ்

6. பின்வரும் பத்தியைப் படித்து இதில் யாருடைய மதப்பார்வை வெளிப்படுகிறது என்பதைக் கூறவும்.

நான் சமூகச் சேவையில் முழுமையாக ஈடுபட்டிருந்தால் அதற்குக் காரணம் சுய உணர்தலுக்கான எனது விருப்பமே. சேவையின் மூலம் மட்டுமே கடவுளை உணர முடியும் என்று நான் உணர்ந்ததால், நான் சேவை என்ற மதத்தை எனது சொந்த மதமாக்கினேன். எனக்குச் சேவை என்பது இந்தியச் சேவை. ஏனென்றால் நான் அதைத் தேடாமலே அது என்னிடம் வந்தது. காரணம் அதற்கான தகுதி என்னிடம் இருந்தது.

(A) சுவாமி விவேகானந்தா (B) மகாத்மா காந்தி

(C) இரவீந்திரநாத் தாகூர் (D) இராஜாராம் மோகன் ராய்

7. பரமாரப் பேரரசின் அரசவைக் கவிஞர் பத்ம குப்தாவின் காவியக் கவிதையின் பெயரைக் குறிப்பிடுக.

(A) நவ-சஹசங்க-சரிதா (B) நைசாதசரிதம்

(C) திரிகலிங்கதிபதி (D) கலிங்கத்துப்பரணி

8. பின்வருபவர்களில் இந்தியாவில் முதல் ஆங்கிலச் செய்தித்தாளை வெளியிட்டவர் யார்?

(A) கங்காதர் பட்டாச்சார்யா
(B) இரவீந்திரநாத் தாகூர்
(C) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி
(D) ராம் மோகன் ராய்

9. கூற்று [A] : பாணினியின் சமஸ்கிருதம், வேதத்தை விட மிகவும் எளிமையாக இருந்தாலும் அது மிகவும் சிக்கலான மொழியாகும்.

காரணம் [R] : ஒவ்வொரு தொடக்கக்காரர், பாணினியின் இசை வழக்குச் சேர்க்கை விதிகளை மேற்கொள்வதில் பெரும் சிரமத்தை மேற்கொள்கின்றனர்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A] -இன் சரியான விளக்கமாகும்
(C) [A] தவறு; ஆனால் [R] சரி
(D) [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி; ஆனால் [R] என்பது [A] -இன் சரியான விளக்கமல்ல

10. கீழ்க்கண்ட பட்டியலில் பிரிட்டிஷ் இந்தியாவில் அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டதன் விளைவாக நடந்தது என்ன?

(A) விவசாய வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டது.
(B) பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்தார்கள்.
(C) ஜமீன்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே கடுமையான பதற்றம் ஏற்பட்டது.
(D) விவசாய உபரியில் பற்றாக்குறை ஏற்பட்டது.

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியை வாசித்து அதனடிப்படையில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளி.

பத்தி 1

மகாத்மா காந்தி கூறியதாவது "சில சாதாரண இளைஞர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கும் நோக்கத்திற்காகத் தங்கள் மகள்களை முற்றிலும் அறியாமை மற்றும் படிப்பறிவில்லாத நிலையில் வைக்கும் பெற்றோரின் குற்றம் சார்ந்த அலட்சியத்திற்காக வருந்துகிறேன்".

மேற்கண்ட பத்தியிலிருந்து உருவான கீழ்க்கண்டவைகளில் சிறந்த மறைமுகமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) தங்கள் மகள்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான கடும் நடவடிக்கைகளைப் பெற்றோர் எடுக்க வேண்டும்.
(B) பெண்களைத் திருமணம் செய்வதற்காக இளைஞர்களின் செயல்பாட்டு நிலை முன்னேற்றப்பட வேண்டும்.
(C) இளைஞர்களைத் திருமணம் செய்வதற்காகப் பெண்களின் செயல்பாட்டு நிலை முன்னேற்றப்பட வேண்டும்.
(D) பெண்கள் வரதட்சணை பிரச்சினைகளை சந்திக்கிறார்கள்.

12. பின்வரும் விருதை அந்த விருதைப் பெற்றவரோடு பொருத்துக?

(a)	பி.பி. லால்	–	(i) பாரத் ரத்னா
(b)	நிர்பந்திர மிஸ்ரா	–	(ii) பத்ம விபூஷன்
(c)	சுப்பு ஆறுமுகம்	–	(iii) பத்ம பூஷன்
(d)	பிரணா ப் முகர்ஜி	–	(iv) பத்ம ஸ்ரீ

	(a)	(b)	(c)	(d)
(A)	(iii)	(iv)	(ii)	(i)
(B)	(ii)	(iii)	(iv)	(i)
(C)	(i)	(ii)	(iii)	(iv)
(D)	(iv)	(iii)	(ii)	(i)

13. கீழ்க் குறிப்பிட்டவற்றில் சரியான பொருத்தங்களைத் தேர்வு செய்க.

(1) ஃபோர்ட்டி – சலிசா
(2) இரசியா பேகம் – ருக்நுதீன்
(3) திவான் ஐ ஆரிஸ் – நிதி அமைச்சர்
(4) பால்பன் – பாரிட்ஸ்

(A) (4) மற்றும் (3) சரி (B) (2), (3) மற்றும் (4) சரி (C) (1) மற்றும் (3) சரி (D) (1), (2) மற்றும் (4) சரி

14. பொருத்துக

வரலாற்றாசிரியர்கள்		புத்தகங்கள்
a) அல்பெரூனி	–	1. கிரன் - உஷ்-சதெயின்
b) மின்கஜ் சிராஜ்	–	2. தாரிக்-இ-பெரோஸ்சாகி
c) அமிர் குஷ்ரு	–	3. தபாகத்-இ-நாசிரி
d) பரணி	–	4. தாரிக்-இ-ஹிந்த்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	2	3	1
(B)	1	2	3	4
(C)	2	4	3	1
(D)	4	3	1	2

15. மைத்ரகா குலம் குஜராத்தில் ஒரு அரசை அதன் தலைநகரான ------- இல் நிறுவியது. அது விரைவில் கற்றல் மற்றும் கலாச்சாரத்தின் இடமாக மாறியது.

(A) மாளவா (B) வல்லபி (C) கௌடா (D) காமரூபா

16. காமாமஸ் வினினால்ஸ் மற்றும் கேமமஸ் இனங்களைக் கொண்ட இந்தியாவின் பூக்கடைப் பகுதி இது?

(A) கங்கைச் சமவெளி (B) தக்காண பிரதேசம்
(C) மலபார் பிரதேசம் (D) அந்தமான்-நிக்கோபர் பிரதேசம்

17. சர் ஹெர்பர்ட் ரிஸ்லி, இந்திய இனங்களை -------- வகைகளாகப் பிரித்துள்ளார்.

(A) 5 (B) 7 (C) 3 (D) 4

18. கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும். இந்தியாவைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை ?

(i) உலகின் இரண்டாவது மக்கட்தொகை கொண்ட நாடாகும்.
(ii) பரப்பளவில் ஐந்தாவது பெரிய நாடாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(iii) 2011ஆம் ஆண்டில், மக்கட்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 382 பேர் ஆகும்.

(A) (i) மட்டும் (B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும் (D) (ii) மற்றும் (iii) மட்டும்

19. கூட்டத்தின் திடீர் அவசரத்தால் மரணம் மற்றும் காயங்களை ஏற்படுத்தும் நிகழ்வுக்குப் பயன்படுத்தப்படும் சொல்.

(A) மிரள் திறனோட்டம் (B) பேரணி

(C) கலவரம் (D) இயற்கைப் பேரழிவுகள்

20. மொழி குழுவுடன் தவறாகப் பொருத்தப்பட்டுள்ள மொழியைக் காண்க.

(i) இந்திய-ஐரோப்பிய குடும்பம் – ஆர்யா

(ii) திராவிட குடும்பம் – திராவிடம்

(iii) ஆஸ்ட்ரிக் குடும்பம் – கன்னடம்

(iv) சினோ - திபெத்திய குடும்பம் – கிராதா

(A) (i) மற்றும் (ii) மட்டும் (B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (iii) மட்டும் (D) (i), (ii) மற்றும் (iv) மட்டும்

21. 2011, மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்கள் தொகை அடர்த்தியை இறங்கு வரிசையில் வரிசைப்படுத்துக.

(1) பீகார் (2) மேற்கு வங்காளம் (3) கேரளா (4) உத்திரப்பிரதேசம்

(A) (4), (1), (2), (3) (B) (1), (2), (4), (3)

(C) (2), (1), (3), (4) (D) (1), (2), (3), (4)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் இந்தியாவின் விவசாயம் தொடர்பான சரியான கூற்றுகள் எவை?

(i) உலகளவில் இந்தியா தேயிலை, கரும்பு மற்றும் எண்ணெய் விதைகள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

(ii) பசுமைப் புரட்சியின் மூலமாக இந்தியா, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது.

(A) (i) மட்டும் (B) (ii) மட்டும்

(C) (i), (ii) ஆகிய இரண்டும் (D) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

23. இந்தியாவின் முக்கிய நிலப்பகுதி ------- இடையே அமைந்துள்ளது.

(A) 8°4′ வடக்கு அட்சரேகை முதல் 37°6′ வடக்கு அட்சரேகை வரையிலும்
68°7′ கிழக்குத் தீர்க்கரேகை முதல் 97°25′ கிழக்குத் தீர்க்கரேகை வரை பரவியுள்ளன.

(B) 8°4′ வடக்கு அட்சரேகை முதல் 36°6′ வடக்கு அட்சரேகை வரை
68°7′ கிழக்குத் தீர்க்க ரேகை முதல் 97°25′ கிழக்குத் தீர்க்க ரேகை வரை

(C) 9°3′ வடக்கு அட்சரேகை முதல் 37°5′ வடக்கு அட்சரேகை வரை
68°7′ கிழக்குத் தீர்க்க ரேகை முதல் 97°25′ கிழக்குத் தீர்க்க ரேகை வரை

(D) 8°4′ வடக்கு அட்சரேகை முதல் 37°6′ வடக்கு அட்சரேகை வரையிலும்
8°7′ கிழக்குத் தீர்க்க ரேகை முதல் 95°25′ கிழக்குத் தீர்க்க ரேகை வரையிலும்

24. 'யானடி' என்னும் இந்தியப் பழங்குடி இனமக்கள் வாழும் மாநிலம்

(A) தமிழ்நாடு (B) கர்நாடகா

(C) ஆந்திரப்பிரதேசம் (D) கேரளா

25. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

நீர்த்தேக்கம்		மாநிலங்கள்
(a) ஒபரா நீர்த்தேக்கம்	–	1. மகாராஷ்டிரா
(b) தாவா நீர்த்தேக்கம்	–	2. உத்திரப்பிரதேசம்
(c) ஹீராஹூட் நீர்த்தேக்கம்	–	3. மத்தியப்பிரதேசம்
(d) கடக்கவாசல நீர்த்தேக்கம்	–	4. ஒரிசா

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	3	4
(B)	2	3	4	1
(C)	1	2	4	3
(D)	3	1	4	2

விடைகள்

1.–(C)	2.–(A)	3.–(C)	4.–(A)	5.–(A)
6.–(B)	7.–(A)	8.–(C)	9.–(B)	10.–(B)
11.–(A)	12.–(B)	13.–(D)	14.–(D)	15.–(D)
16.–(B)	17.–(B)	18.–(B)	19.–(A)	20.–(C)
21.–(D)	22.–(C)	23.–(A)	24.–(C)	25.–(B)

கீழ்க்கண்ட தலைப்புக்கான சரியான பதிலை இவ்வலுவலக இணையதள மின்னஞ்சலுக்கு அனுப்பும் கட்டுரைக்குச் சிறப்புப் பரிசு, புகைப்படத்துடன் கூடிய கட்டுரை அடுத்தமாத இதழில் இடம்பெறும்.

தலைப்பு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.08.2025 அன்று தொடங்கிவைத்த "நலம் காக்கும் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தின் சிறப்பு மருத்துவ முகாம் வாயிலாகப் பயன் பெற்றது குறித்து விவரிக்கவும்.

கட்டுரை அனுப்ப வேண்டிய இணையதள முகவரி: tamilarasujournal@gmail.com

செம்மொழியான தமிழ்மொழியாம் போட்டிகள்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள்

(01-08-2025)

சென்னை கலைவாணர் அரங்கத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் நடத்தப்பட்ட "செம்மொழியான தமிழ்மொழியாம்" போட்டிகளில் வெற்றிபெற்ற 34 பேருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தேர்வு செய்யப்பட்ட படைப்புகளை காண QR Code-யை Scan செய்யவும்.

அதில்

- சொற்பொழிவுப் போட்டியில் 450 பேரும்,
- கவிதைப் போட்டியில் 875 பேரும்,
- வினாடி வினாப் போட்டியில் 1,021 பேரும்,
- அறநெறிக்கதைகள் போட்டியில் 1,020 பேரும்,
- என்னுள் இருக்கும் கலைஞர் போட்டியில் 920 பேரும்

என இந்த 5 பிரிவுகளில் 4,286 பேர் கலந்து கொண்டனர்.

இவர்களில் 34 பேர் வெற்றி பெற்றவர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

ஓவியம் / வரைதல் போட்டி





DIPR
வெளியீடு: **இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை
tndiprnews | tndipr | tndipr | TN DIPR | www.dipr.tn.gov.in | TNDIPR, Govt. of Tamil Nadu
SCAN HERE

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள், 11.08.2025 அன்று போக்குவரத்துத் துறையின் சார்பில், 233 கோடி ரூபாய் மதிப்பிலான பயணிகளின் தேவைக்கேற்ப உயரத்தைக் குறைக்கும் வசதி கொண்ட 55 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார்.

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

தமிழரசு
Tamilarasu

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத் தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.08.2025 அன்று, சென்னை, மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. **பகவந்த் மான்** அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** ஆகியோர் முன்னிலையில், உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புறப் பகுதிகளில் செயல்படும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி, காலை உணவு வழங்கி அவர்களுடன் உணவு அருந்தினார்.

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department, Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: R.Pugazh Vendhan at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,